திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மார்ச் 2025,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:08, Pages:56
MARCH-2025, Price Rs.20/-



தெலுங்கு வருடப்பிறப்பு (யுகாதி)
30.03.2025



04-02-2025 அன்று திருமலையில் இரத சப்தமியை முன்னிட்டு
ஏழுமலையானுக்கு நடைபெற்ற ஏழு வாகனசேவை திருக்காட்சிகள்



உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் கும்பமேளாவில் அமைக்கப்பட்ட
தி.தி.தே. மாதிரி ஆலயத்தைப் பார்வையிட்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்
குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு தம்பதியினர்



*வாஸாம்ஸி ஜீர்ணாநி யத$_2$ா விஹாய*
*நவாநி க்$_3$ருஹ்ணாதி நரோபராணி|*
*தத$_2$ா சரீராணி விஹாய ஜீர்ணாந்*
*யந்யாநி ஸம்யாதி நவாநி தே$_3$ஹீ ||*

எப்படி மனிதன் நைந்து போன பழைய துணிகளை
நீக்கிவிட்டு, வேறு புதிய துணிகளை எடுத்துக்
கொள்கிறானோ, அவ்வாறே ஜீவாத்மா நைந்துபோன
பழைய உடல்களை நீத்துவிட்டு, வேறு புதிய
உடல்களை அடைகிறான்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–22*

*உல்லாஸ பல்லவிதபாலித ஸப்தலோகீ*
*நிர்வாஹ கோரகித கேம கடாக்ஷ லீலாம்*
*ஸ்ரீரங்க ஹர்ம்யதல மங்கள தீப ரேகாம்*
*ஸ்ரீரங்கராஜ மஹிஷீம் ச்ரியமாச்ரயாம:*

தோற்றத்தால் தளிர்த்ததும்,
ஆளப்படும் ஏழுலகங்களையும்
தாங்குவதனால் அரும்பியதுமான,
சிறிய நோக்கத்தின்
விளையாட்டுடையவளும்,
திருவரங்கத்திலுள்ள,
விமானத்திற்கு மங்கள விளக்கு
ஜ்வாலைப் போன்றவளும்,
ஸ்ரீரங்கராஜனுடைய
பட்டமஹிஷியுமான,
ஸ்ரீரங்கநாச்சியாரை
வணங்குகிறோம்.

*– பராசரபட்டர்*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்



**ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...**

- **"ஸப்தகிரி"** திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- **"ஸப்தகிரி"** இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/–, ஆயுள் சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/–
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஓ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- **"ஸப்தகிரி"** சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- **"ஸப்தகிரி"** இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.








**மேலும் தகவல்களுக்கு :**
**0877- 2264543, 2264359**



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

மார்ச் 2025

மலர் 04
இதழ் 08


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| ஸ்ரீநம்பெருமாளும் ஸ்ரீகமலவல்லி நாச்சியாரும் - திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி. | 7 |
| சோட்டானிக்கரையில் மகம் தொழல் - முனைவர். பா.காயத்திரி, சென்னை. | 10 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 14 |
| தசாவதாரப்பெருமாள் : சக்கரவர்த்தித் திருமகன் - பகவத் விஷய கட்டுரைகள், பாகம்-1 | 16 |
| யார் பக்தர்கள் தெரியுமா? -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 18 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 22 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் - திரு.எம்.எஸ். சுகுமார், சென்னை. | 26 |
| தி.தி.தே.வில் பெண்களுக்கே முதலிடம் - திரு.அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 31 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருவல்லிக்கேணி - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 35 |
| திருவேங்கடவன் திருவருள் - திருமதி மு.இராஜகுமாரி வெங்கடேசன், ஆரணி. | 40 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: திருவரங்கம் வரலாற்று சிற்பம் -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 41 |
| பெண்கள் குங்குமம் அணிவதால் பலன்கள் - திருமதி பி.கவிதா, சிதம்பரம். | 42 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 44 |
| ஆயுர் வேதம்: பிரியாணி இலை -திருமதி வி.உஷா, திருப்பதி. | 46 |
| ராசிபலன்கள் : மார்ச் 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 47 |
| நீதிக்கதை: வாழ்க்கையே ஒரு தவம் தான்! -திரு.எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : தாயாரே துணை | 52 |



சிறப்பு ஆசிரியர் :
**திரு. J. சியாமளா ராவ்,** ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
பி.ஜி. டிப்ளமா இன் எப்பிக்ராபி, டிப்ளமா இன் யோகா
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு.** P. **ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை
பின்னட்டை : ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்





# பங்குனியின் சீர்மை

மாதங்களின் எண்ணிக்கையில் இந்தியக் காலமுறைப்படி மாதங்களில் இறுதியாக வருகின்ற மாதம் "பங்குனி (பால்குண) மாதம்" ஆகும். அறிவியல் பூர்வமாக இந்தியப் பருவக் காலங்களை கவனித்தோமேயானால் ஆறு ருதுக்களில் இறுதியானதான "சிசிரம்" ருது வருவதும் இறுதி மாதமாகும். இது பின்பனிக்காலத்தைக் குறிக்கின்றது. இக்காலத்தில்தான் செடி கொடிகள், மரங்கள் என அனைத்திலும் இளம் தளிர்கள் வருவதைக் காணலாம்.

பங்குனி மாதத்தை மங்கலங்கள் நிறைந்த மாதமாகவும் போற்றுவர். புராணங்களில் குறிப்பிடப்படும் பெரும்பாலான மங்கலக் காரியங்கள் யாவும் இம்மாதத்தில்தான் அரங்கேறியுள்ளன என ஆன்றோர் போற்றுவர். அதேபோன்று இம்மாதத்தில்தான் பல விரதங்களும் பூஜைகளும் செய்தல் வேண்டும் எனவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இம்மாதத்தில் துவங்கப்படும் பணிகளில் முக்கியமாக வீடு கட்டும் பணிகள் மேற்கொண்டால் பிள்ளைப்பேறு, தனலாபம் கூட கிட்டிடும் என மத்ஸ்ய புராணம் கூறுகின்றது. இம்மாதத்தில் நாம் செய்திடும் சிறு தானம் கூட பெரும் பலனை வழங்கிடும் என்பர். இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் இறைவழிபாடும் பல தடைகளை நீக்கி நமக்கு வெற்றியை அளித்திடும் என்றும் கூறுவர்.

தெய்வத் தம்பதிகளின் திருமணங்கள் கூட இந்த பங்குனி மாதத்தில் நடைபெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. பங்குனி மாதத்தில் தெய்வத் திருமணங்கள் நடைபெறும் திருக்கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்தால் திருமணமாகாதவர்களுக்கு உடனே திருமணம் கைக்கூடும் என்பர். இம்மாதத்தில் தெய்வத் திருமணங்கள் மட்டுமின்றி பல இறை அவதாரங்களும் நிகழ்ந்துள்ளன.

பங்குனி மாதத்தில் வருகின்ற உத்திர நட்சத்திரம் மிகவும் மேன்மை பொருந்தியதாகும். இந்நன்னாளில்தான் பரம்பொருளான அந்த மஹாவிஷ்ணுவின் பட்டத்து ராணியாகவும், நமக்கெல்லாம் அப்பரந்தாமனின் இன்னருள் கிட்டிட துணை புரியும் தயா குணம் கொண்ட மஹாலக்ஷ்மித் தாயாரின் அவதார நன்னாளாகும். பங்குனி மாதத்தில் வருகின்ற உத்திர நட்சத்திரத்தில்தான் மஹாலக்ஷ்மித் தாயாரும் அவதரித்தார். இந்நாளில் மஹாலக்ஷ்மித் தாயாரை வழிபட்டால் அத்தாயாரின் அருட்பார்வையானது நமக்குக் கிட்டிடும். முக்கியமாக அன்றைய தினம் ஆதிசங்கரருக்கு பொன்மழையை அளித்த "கனகதார ஸ்தோத்திரம்" பாராயணம் செய்திடல் உத்தமம்.

திருமலையில் திருமலையப்ப ஸ்வாமிக்கு வருடந்தோறும் ஸ்வாமி புஷ்கரணி எனப்படும் திருக்குளத்தில் தெப்போத்ஸவமும் இம்மாதத்தில்தான் நடைபெறும். மின் விளக்குகளால் அழகாக அலங்கரிக்கப்பட்ட திருக்குளத்தில் முதல் நாள் திரேதாயுக இராமபிரானாகவும், இரண்டாம் நாள் துவாபர யுக கிருஷ்ணனாகவும் எம்பெருமான் தெப்பத்தில் எழுந்தருளி பக்தர்களுக்குத் திருக்காட்சி அளித்திடுவார். மற்றைய மூன்று நாட்களும் கலியுக கண்கண்ட தெய்வமான ஸ்ரீநிவாசன் தெப்பத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் புரிந்திடுவார். இவ்வுத்ஸவம் காண்போருக்குக் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்திடும்.

திருமலையில் ஆயிரக்கணக்கான தீர்த்தங்கள் பாய்ந்தோடி அம்மலையையே வளமாக்குகின்றன. அத்தீர்த்தங்களில் ஒன்றான குமாரதாரா தீர்த்தத்திற்கும் பால்குண மாதப் பௌர்ணமியில் தீர்த்த முக்கோட்டி நடைபெறும்.

சாந்திரமான தெலுங்கு பஞ்சாங்கத்தின்படி பால்குண மாதத்தின் இறுதியில் அமாவாசைக்கு பின்னர் திருவேங்கடமுடையான் திருச்சன்னதியில் சைத்ர சுத்த பாட்டியம் அன்று தெலுங்கு மக்களின் பண்டிகையான உகாதி எனப்படும் தெலுங்கு வருடப்பிறப்பு கொண்டாடப்படும். அன்றைய தினம் திருமலை திருக்கோயிலுக்குள் திருமாமணி மண்டபத்தில் "உகாதி ஆஸ்தானம்" அதாவது புது வருடத்தின் பஞ்சாங்கம் வாசித்தல் மிகச் சிறப்பாக நடைபெறும். தற்போது வருகின்ற "விஷ்வாவசு" நாம வருடத்தில் கலியுக வைகுண்டமான திருமலையில் நிகழ இருக்கின்ற "உகாதி ஆஸ்தானம்'' முன்னிட்டு திருமலையில் எழுந்தருள் பாலிக்கும் திருவேங்கடமுடையானின் திருவருள் அனைவருக்கும் கிட்டி, ஆயுள் ஆரோக்கியத்துடன் சகல சம்பத்துக்களும் கிடைத்திட ஸப்தகிரி பிரார்த்திக்கிறது.

"திரு" என்கிற வார்த்தையை இணைக்காது வைணவத்தில் திருமாலின் திருப்பெயர் இல்லை என்றே கூற லாம். திருமாலை "மால்" என்று யாரும் அழைப்பதில்லை. "திருமால்" என்றே அழைப்பர். "திரு" என்பது பிராட்டியைக் குறிக்கும் சொல் ஆகும். வைணவ ஆலயங்களில் முதலில் நாம் சேவிக்க வேண்டியது பிராட்டியைத்தான். தாயார் சன்னதிக்குச் சென்று சேவித்து விட்டு, அதன் பின்னர் அவள் புருஷகாரத் தோடு திருமாலைச் சேவிக்க வேண்டும் என்பதே வைணவ மரபு.

திருமாலுக்கு என்னென்ன ஏற்றம் உண்டோ அத்துணை ஏற்றமும் பிராட்டிக்கும் உண்டு. திருமால் அவதரிக்கும் போதெல்லாம் தாயாரும் அவனுக்கேற்றவாறு அவதரிக்கிறாள். வாமனனாக வரும் போது கூட அவன் தனியாக வரவில்லை. அவன் திருமார்பில் திருமகள் இருந்ததால் அதை வெளிக் காட்டாமல் மான் தோலால் மறைத்துக் கொண்டு வந்தான் வாமனன். திருமாலை சேவிக்கும் போது அவன் திருமார்பில் உறையும் தாயாரையும் சேர்த்தே தரிசிக்கின்றோம்.

108 திவ்ய தேசங்களில் முதல் திவ்ய தேசம் திருவரங்கம். அத்திருவரங்கத்தில் 1) பெரிய பிராட்டியார் எனப் பெயர் பெற்ற ஸ்ரீரங்க நாச்சியார், 2) ஸ்ரீகமலவல்லி நாச்சியார், 3) ஸ்ரீசேரகுல வல்லி நாச்சியார், 4) ஸ்ரீதேவி, 5) ஸ்ரீபூமாதேவியான பூதேவி, 6) ஸ்ரீகரூவூல நாச்சியார், 7) துலக்க நாச்சியார், 8)ஸ்ரீஆண்டாள் என எட்டு நாச்சிமார்களுக்கு வருடந்தோறும் நம்பெருமாளுடன் சேர்த்தி உத்ஸவம் நடைபெறும்.


ஸ்ரீரங்கத்தில் பங்குனி மாதம் நடை பெறுகின்ற ஆதி பிரம்மோத்ஸவத்தில் இரு தேவியருடன் நம்பெருமாளுக்கு சேர்த்தி உத்ஸவம் நடைபெறும். லக்ஷ்மி ஜெயந்தி என்று போற்றப்படும் பங்குனி உத்திரம் அன்று ஸ்ரீரங்க நாச்சியாரின் திருநட்சத்திரத்தில் ரெங்கநாச்சியாருடன் சேர்த்தி உத்ஸவம் நடைபெறும். அதே போன்று ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தின் உப ஆலயமாகத் திகழும் திருஉறையூரில் குடிகொண்டுள்ள தாயார் ஸ்ரீகமலவல்லி நாச்சியார். இந்தத் தாயாரின் நட்சத்திரம் ஆயில்யம் ஆகும்.

தர்ம வர்மாவின் வம்சத்தில் நந்த சோழன் என்பவன் ஆட்சி செய்து வந்தான். குறைவற்ற நல்லாட்சி மற்றும் இறைப் பணியிலும் சிறந்தவனான அவன் தான் கொஞ்சி மகிழ தனக்கு ஒரு வாரிசு இல்லை எனவும், தனக்கு சந்தான பாக்கியம் அருள வேண்டியும் ஸ்ரீரங்க நாதரை வேண்டிக் கொண்டிருந்தான். ஸ்ரீரங்கநாதரும் தன் மீது மாறா பக்தியைக் கொண்டிருந்த அவனின் வேண்டுதலை ஏற்று, தன் இல்லாளான மஹாலக்ஷ்மியை




திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி

மன்னனுக்கு மகளாக அவதரிக்கச் செய்தார். தாயாரும் அங்ஙனமே ஒரு தாமரையில் ஆயில்ய திருநட்சத்திரத்தன்று அவதரித்தாள். பெரிய தாமரையின் மேல் தங்கம் போன்று ஜொலித்த ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவியைக் கண்டு ஆனந்தம் அடைந்தான் மன்னன். உடனே அந்தக் குழந்தையை விரைந்துச் சென்று தன் கைகளால் எடுத்து வந்து அக்குழந்தைக்கு "கமல வல்லி" (தாமரையில் உதித்தவள்) என்று திருநாமம் சூட்டி வளர்த்தான்.



சோழ தேசத்தின் இளவரசியாக வளர்ந்த கமல வல்லி ஒரு நாள் உத்யானவனத்தில் தன் தோழிகளுடன் வலம் வருகையில் அங்கு வேட்டைக்காரனாக வந்த ஸ்ரீரங்கனைக் கண்டு அவன் தேஜஸைப் பார்த்து மயங்கினாள். அவன் மேல் தீராத காதல் கொண்டாள். அவளுடைய நிலையை உணர்ந்த ராஜா செய்வதறியாது தவித்தான்.

ஒரு நாள் ஸ்ரீரங்கநாதர் மன்னனின் கனவில் தோன்றி "உன்னிடம் வளர்பவள் ஸ்ரீமஹாலக்ஷ்மியே. அவளை திருமணக்கோலத்தில் திருவரங்கத்திற்கு அழைத்து வா" என்று கூறினார். இதைக் கேட்டு நெகிழ்ந்து போன மன்னன், பரமனின் அருளுரைப்படி, மண மகள் போல் தன் மகளை அழகாக அலங்கரித்து, திருவரங்கத்திற்கு திருவீதி உலாவாக அழைத்து வந்தார். சந்நிதி முன் வந்தவுடன் கமலவல்லித் தாயாரை தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டார் திருவரங்கநாதன்.

மன்னனும் இந்த நிகழ்வின் நினைவாக திருஉறையூரில் ஒரு திருக்கோயிலைக் கட்டினான்.

இந்த ஆலயத்தில் தாயார் வடக்கு நோக்கி அதாவது ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தை நோக்கியவண்ணம் சேவை சாதிக்கிறாள். தன்னை மணக்க வந்த ஸ்ரீரங்கநாதரை தனக்காக வந்த அழகிய மணளா என்று அழைத்ததன் காரணமாக இந்தத் திவ்ய தேசப் பெருமாள் "அழகிய மணவாளப் பெருமாள்" எனப் போற்றப் படுகிறார்.





**ஸ்ரீரங்கம் மட்டுமின்றி அனைத்து வைணவ ஆலயங்களிலும் மார்கழி மாதம் வளர்பிறை ஏகாதசியில் வைகுண்ட வாயில் திறப்பு என்பது நடைபெறும். அன்று பெருமாள் வைகுண்ட வாயில் கடந்து வருவது என்பது விசேஷம். ஆனால் திருவுறையூர் ஆலயத்தில் மாசி மாதம் தேய்பிறை ஏகாதசி அன்று வைகுண்ட வாயில் திறப்பு நடைபெறுகிறது. அன்று வழக்கத்துக்கு மாறாக பெருமாள் வைகுண்ட வாயில் கடக்காமல் தாயார் வைகுண்ட வாயில் கடப்பது இந்த ஆலயத்தின் சிறப்பு ஆகும். மேலும் தாயார் அவதரித்த திருத்தலமாதலால் இங்கு தாயாருக்கே ஏற்றமளித்து அனைத்து வழிபாடுகளும் தாயாருக்கே செய்யப்படுகிறது. வருடா வருடம் திருவரங்கப் பெருமானான ஸ்ரீநம்பெருமாள் இத்தலத்திற்கு எழுந்தருள்வதால் இங்கு உற்சவர் தனியாக இல்லை என்பது கூடுதல் சிறப்பு.**

தாயார் அவதரித்த ஆயில்யம் நட்சத்திரத்தில் நம்பெருமாள் (ஸ்ரீரங்கநாதர்) உடன் கமலவல்லித் தாயாருக்கு சேர்த்தி உத்ஸவம் நடைபெறும். பங்குனி ஆதி பிரம்மோத்ஸவத்தில் ஆறாம் நாளன்று அதிகாலையில் நம்பெருமாள் பல்லக்கில் புறப்படுவார். காவிரி ஆற்றைக் கடந்து திருவுறையூரை அடைவார்.

அந்த ஊருக்கு நம்பெருமாள் வருவதை முன்னிட்டு ஊரெல்லாம் வாழை மரங்களால், மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். ஒவ்வொரு வீட்டின் முன்னரும், வீதிகள் தோறும் அழகிய மாக்கோலங்களை இட்டு அங்கிருக்கும் பெண்மணிகள் தங்களை சிறந்த வண்ணம் அலங்கரித்துக் கொண்டு அரங்கன் வருகைக்காக காத்துக் கிடப்பர்.

நம்பெருமாள் ஊருக்கு வந்தவுடனே மங்கல நாதங்கள் ஒலிக்க, பாசுரங்கள், கீர்த்தனைகள் பாடியபடி திருவுறையூர் நாச்சியார் திருக்கோயிலுக்குள் நுழைவார். கமலவல்லித் தாயார் அவரை வரவேற்றபின் அழகாக அலங்கரிக்கப்பட்ட சேர்த்தி மண்டபத்தில் நம்பெருமாளும், கமலவல்லி நாச்சியாரும் இணைந்து பூஜைகள், நைவேத்தியங்கள் ஏற்று பக்தர்களுக்கு தரிசனம் அளிப்பர். அன்று மாலை நேரத்தில் நம்பெருமாள், ஸ்ரீரங்கம் ஆலயத்திற்குத் திரும்புவார்.

இந்த அற்புத நிகழ்வை தரிசிக்கும் கணவன் –மனைவி இணைபிரியாத வாழ்வைப் பெறுவர். கன்னிப்பெண்கள் தாங்கள் விருப்பப்பட்ட விதமான மணவாழ்வை அடைவர் என்பது ஐதீகம்.

இந்த ஆலயத்தில் மணவாழ்வை எதிர்நோக்கும் கன்னிப் பெண்கள் ஆயில்யம் நட்சத்திரத்தில், வெள்ளி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அர்ச்சித்து வழிபட்டால் அவர்களுக்கு விரைவில் மணவாழ்வு அமையும் என்பது உறுதி. பிரிந்த தம்பதிகள் மீண்டும் இணைவார்கள்.

கிழமைகளில் ஆறாவதாக வரும் வெள்ளிக்கிழமை மிக விசேஷமாக பெண்கள் வழிபாடு செய்வது அம்மன் அருளைப் பெறுவதற்காகும். சக்தி மிகவாகி சகல சம்பத்துக்களும் அமையும். தாயாருக்குரிய வெள்ளிக்கிழமை வழிபாடு தவிர வெள்ளி என்பது சுக்கிரனைக் குறிக்கும். இறந்தவரை எழுப்பும் மந்திரசக்தி சுக்கிரன் ஆவார். நீண்ட நாள் ஆயுளும், சகல சௌபாக்கியமும் பெற வெள்ளிக் கிழமைகளில் திருவிளக்கு பூஜையும் நடைபெறும்.

பங்குனி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் அழகிய மணவாளனுக்கு கமலவல்லியை விவாஹம் செய்து கொடுத்தான் மன்னன். அன்றிலிருந்து, உறையூர், நாச்சியார் கோயிலாக ஆயிற்று. இந்த வைபவம், ஒவ்வொரு வருடமும், பங்குனி மாத ஆயில்ய நக்ஷத்ரத்தில், உறையூரில் நடைபெறுகிறது.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

## SAPTHAGIRI

**(MONTHLY)**
**FORM IV**
*See Rule 8*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | Sri P. Ramaraju, M.A. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | S.O.,T.T.D.Press, K.T.Road, Tirupati. |
| 4. Publisher's Name | : | **Dr. K. Radha Ramana**, M.A.,M.Phil., Ph.D., P.G.Dip.Epigraphy, Dip.in.Yoga |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office,2nd Floor, T.T.D.Press Building,K.T. Road, Tirupati. |
| 5. Editor's Name | : | **Dr. V.G.Chokkalingam**, M.A., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office,2nd Floor, T.T.D.Press Building,K.T. Road, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Tirumala Tirupati Devasthanams |

*I, K. Radha Ramana, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI
Date : 28-02-2025

**(Sd.) Dr. K. Radha Ramana**
*Signature of the Publisher*



# சோட்டானிக்கரையில் மகம் தொழல்

– முனைவர் பா.காயத்திரி, சென்னை.

"அம்மே நாராயணா, தேவி நாராயணா, லக்ஷ்மி நாராயணா, பத்ரே நாராயணா..." என்ற பாடல் வரிகளைக் கேட்டவுடன் நினைவுக்கு வருவது "சோட்டானிக்கரை பகவதி அம்மன்" தான்.

கேரளா மாநிலத்தில், எர்ணாகுளம் மாவட்டத்தில் (எர்ணாகுளம், கொச்சியிலிருந்து சுமார் 16 கி.மீ. தூரம்) அழகிய இயற்கை வளமை நிறைந்த இவ்வாலயம் சுமார் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். கேரளாவில் புகழ் பெற்ற மற்றும் சக்தி வாய்ந்த கோயில்களில் ஒன்றாக விளங்கும் இந்தத் திருத்தலம் 51 சக்தி பீடங்களில் ஒன்று. சதி தேவியின் குருதி அதாவது இரத்தம் விழுந்த தலமாக இது கருதப்படுகிறது.

### தல புராணம்

பழங்காலத்தில் சோட்டானிக்கரை, யக்ஷி மற்றும் ரக்தராக்ஷஸர்கள் நிறைந்த அடர்ந்த காடாக இருந்ததாம். அக்காட்டில் கண்ணப்பன் என்ற காட்டுவாசி தன் மகள் மணிமங்காவோடு வாழ்ந்து வந்தான். காளி பக்தனாகிய அவன் எல்லா வெள்ளிக் கிழமையும் ஒரு பசுக்கன்றைப் பலி கொடுத்து வந்தான். ஒருமுறை, ஒரு அழகான பசுக்கன்றை திருடி பலியிடப் போகும் வேளையில் அவன் மகள் அதனை தடுத்து, "வேண்டாம்" என்று மன்றாட, அவனும் அத்துடன் பலி கொடுப்பதை நிறுத்தி விட்டான். சிறிது நாட்கள் கடந்த பின்னர் அவனது மகள் பாம்பு கடித்து இறைவனடி சேர, இறுதிக் காரியங்கள் செய்வதற்கு முன் அவள் உடல் மறைந்திட இதற்கு காரணம் என்ன என பூசாரியிடம் கேட்டான். அவன் கன்றை தாயிடம் இருந்து பிரித்துப் பலி கொடுத்ததால் வந்த கர்ம வினையே எனக் கூறினார். கண்ணப்பன் அப்பசுக் கன்றை தேடிய போது கன்றுக் குட்டி இருந்த இடத்தில் இரு கற்களைக் கண்டான். இக்கற்கள் குறித்து விவரித்த பூசாரி, "அந்த கற்கள் மஹா விஷ்ணு மற்றும் லக்ஷ்மி தேவி எனவும், தினமும் அதனை வழிபட்டால் அவனுக்கு ஏற்பட்ட பாவங்கள் விலகும் என அறிவுறுத்தினார். கண்ணப்பனும் அவ்வாறே செய்து இறுதியில் அவன் மரணம் அடைந்த பின்னர் அப்பகுதியே அடர்ந்த புற்காடாக மாறியது.



சில காலம் சென்ற பின், அங்கு ஓர் இடைச்சி புல் வெட்ட வருகிறாள். தன் அரிவாளுக்கு சாணைத் தீட்ட எண்ணி கண்ணப்பன் பூஜித்த அந்தக் கற்களை அதற்குப் பயன்படுத்தினாள். அதிலிருந்து ரத்தம் வழிவதைக் கண்டாள். இதை அறிந்த அந்த ஊர் மக்கள் கூட்டமாக வந்தபோது அங்கிருந்த பூசாரி அந்தக் கற்களுக்கு தெய்வீகச் சக்தி இருப்பதாகவும், அதை பூஜிப்பதால் அனைத்து நன்மைகளும் உண்டாகும் எனவும் தெரிவித்தார். இவ்விதமாக இங்கு கோயில் எழுப்பப்பட்டது.

ஆதிசங்கரர் வாழ்ந்த காலத்தில், கேரளாவில் சரஸ்வதி தேவிக்கு ஒரு கோயில் கூட இல்லை. எனவே, சரஸ்வதி தேவியை அங்கு வரவழைக்க கர்நாடகாவில் சாமுண்டி மலையில் தியானித்தார். தேவியும் அங்கு தோன்றி, "இங்கிருந்து திரும்பிப் பார்க்காமல் சென்று கொண்டே இரு" என கட்டளை இட, அவரும் நடந்துச் சென்றார். அந்த தேவியும் தன் பின்பாக வருவதை சலங்கையொலி வாயிலாக அறிந்தார் ஆதிசங்கரர். ஆதிசங்கரர் நடந்து கொண்டே இருந்தார். கோடசாத்ரி மலையின் கீழே இறங்கி சில அடிகள் வைத்தவுடன் அந்தச் சலங்கை ஒலியானது நின்று விட்டது. உடனே ஆதிசங்கரர் திரும்பி பார்த்தார். தேவியும் அங்கேயே மூகாம்பிகையாகத் தங்கி விட்டாள். ஆதிசங்கரர் மீண்டும் தேவியிடம் மன்னித்தருள வேண்டும் என வேண்டினார். தேவியும் "அனுதினமும் காலை வேளையில் சோட்டானிக் கரையில் நான் தரிசனம் அளிப்பேன்" என உறுதி கூறினாள். அதனால்தான் மூகாம்பிகை ஆலயம் நடை திறப்பதற்கு முன்னர் அதி காலையிலே சோட்டானிக் கரை ஆலயம் நடை திறக்கப்படுகிறது. அந்தச் சமயத்தில் வெள்ளை நிற ஆடையுடன் கலைவாணியாக தேவி காட்சி அளிக்கிறாள்.

சோட்டானிக்கரை கீழ்காவு கோயிலில் பத்ர காளி இருக்கிறாள் என்பது ஐதீகம். புராணத்தின்படி ஓர் இரவு நிலவொளியில் ஒரு அந்தணர், தனது இல்லத்திற்குத் திரும்பிக் கொண்டிருக்க, ஓர் அழகான பெண் தனியாய் நிற்க, அவளை வீடு வரை உடன் வந்து விட அந்த அந்தணர் முற்பட்டார். போகும் வழியில் பூசாரியின் வீட்டிற்குச் சென்று வழியில் நடந்ததை கூறினார் பூசாரி. அது ஒரு யக்ஷிணிதான். தாங்கள் வேகமாக சோட்டானிக்கரை கோயிலை அடையுங்கள். அதற்கு முன்னர் அந்த யக்ஷிணி ஏதாவது இடையூறுகள் செய்தால் இந்த பூஜித்த பவித்ர கற்களை அதன் மீது எறியுமாறு கூறினார். அந்த அந்தணரும் விரைந்து வந்து கோயிலில் நுழைய முற்படும் வேளையில் அந்த யக்ஷிணி பிடித்தாள். அந்த அந்தணர் தேவியை அம்மா என்னைக் காப்பாற்றுங்கள் எனக் கதறினார். உடனே பத்ரகாளி வந்து அவரைக் காப்பாற்றி விட்டு அங்கே இருக்கும் திருக்குளத்தில் இறங்கினாள். பின்னர் பல நூறு ஆண்டுகளுக்கு பிறகு வில்வ மங்கலம் சுவாமிகளால் பத்ரகாளியின் விக்கிரஹம் கண்டெடுக்கப்பட்டு, பூஜித்து வருகின்றனர்.

இந்த அம்மன் சக்தி தேவி ராஜராஜேஸ்வரி, மஹாலக்ஷ்மி, ஸ்ரீபகவதி, பத்ரகாளி, சரஸ்வதி, துர்கா என பல பெயர்களால் அழைக்கப்படுகிறாள். அடர்ந்த வனப்பகுதியில் பரந்த நிலப் பரப்பில் கட்டப்பட்டுள்ள அழகிய இயற்கை எழிலின் நடுவில் சோட்டானிக்கரை பகவதி அம்மன் மூல மூர்த்தியாக அருள் புரிகிறாள். மகாசிவன், கணபதி, ஐயப்பன் மற்றும் பிற உபதேவதைகளின் சந்நிதிகளும் கோயிலுக்குள்ளே அமைக்கப்பட்டு இருக்கிறது.





இந்த ஆலயத்தின் அடிவாரத்தில் கிழக்கு பகுதியில் “கீழ்காவு” (பத்ரகாளி) என்னும் ஆலயம் உள்ளது. மேற்கு நோக்கி அமைந்துள்ள இந்த விக்கிரகம் வில்வமங்கலம் சுவாமிகள் பிரதிஷ்டை செய்தார்.

சோட்டானிக்கரை அம்மன் ஒவ்வொரு நாளும் மூன்று வடிவங்களில் காட்சி அளிப்பது சிறப்பான அம்சமாகும். அதாவது காலையில் வெந்நிற ஆடை அணிந்து ஞானவடிவமான சரஸ்வதி தேவியாகவும், மதியம் வேளையில் அடர்ந்த சிவப்பு நிற ஆடை அணிந்து ஐச்வர்யத்தை அளிக்கும் மஹா லக்ஷ்மியாகவும், மாலையில் நீல நிற ஆடை அணிந்து சக்தியின் வடிவமாக துர்கையாகவும் காட்சியளிக்கிறாள். உச்சிக் கால பூஜையில் பத்ரகாளியாகப் பூஜிக்கப்படுகிறாள்.



### “மகம் தொழல்”

இக்கோயிலில் பலவிதமான உற்சவங்கள், பூஜைகள் நடைபெற்றாலும் வருடத்திற்கு ஒருமுறை ஏழு நாட்கள் நடைபெறும் திருவிழா மிகவும் புகழ் பெற்ற ஒன்றாகும். அந்த ஏழு நாட்களில் “மகம் தொழல்” என்பது உலகப் பிரசித்தி பெற்றது ஆகும். இவ்விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மாசி மாத ரோகிணி நட்சத்திரத்தன்று கொடியேற்றத்துடன் துவங்கி, உத்திர நட்சத்திரத்தில் நிறைவுறும் விதமாக ஏழு நாட்கள் இவ்விழா நடைபெறுகிறது.

இந்த நாட்களில் அம்மன் தினமும் ஆலயத்தைச் சுற்றி திருவீதி உலா வருவாள். “ஆராட்டு உத்ஸவம்” அதாவது தீர்த்தவாரி உத்ஸவம் மற்றும் “பூரம் எழுநெல்லிப்பு” அதாவது அம்மனின் வடிவத்தைச் சுமக்கும் பட்டத்து யானை இருபுறமும் மூன்று யானைகள் என மொத்தம் ஏழு யானைகள் நன்கு அலங்கரிக்கப்பட்டு நடந்து வர, பஞ்ச வாத்தியங்கள் முழங்க திருவீதி உலா வருவாள். இறுதியாக கீழ்காவு தேவியின் “வலிய குருதி” பூஜையுடன் இத்திருவிழா நிறைவு பெறும்.



“மகம் தொழல்” என்றால் என்ன? மகம் என்ற திருநட்சத்திரத்தில் சுவாமி வில்வமங்கலம் என்பவருக்கு தேவி சங்கு, சக்கரங்களை தனது இரண்டு திருக்கரங்களில் தாங்கிய வண்ணமும், மற்ற இரண்டு திருக்கரங்கள் அபய, வரத வடிவத்திலும் “சர்வாலங்கிருத பூஷிதையாக” பகல் பொழுதில் சுமார் 2 மணிக்கு தரிசனம் அளித்தாள். அந்நிகழ்வினை நினைவுக்கூறும் விதத்தில் அமைந்ததே இந்த “மகம் தொழல்”.

அன்றைய தினம் காலைப் பொழுதில் கோயிலின் வடக்கு திசையில் உள்ள “ஒணக்கூர்” எனும் குளத்தில் “ஆராட்டு உத்ஸவம்” கண்டு பகவான் சாஸ்தா உடன் செல்ல, ஏழு அலங்கரிக்கப்பட்ட யானைகளுடன் வீதி வலம் வந்து, “பூர பரம்பு” என்னுமிடத்தில் எழுந்தருளுவாள். இன்னிசைக் கச்சேரிகள் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறும். காலை 11.00 மணி வரையிலும் அங்கு தரிசனமளித்த பின்னர் ஆலயத்திற்குத் திரும்புவாள். உச்சிக்









திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையானின்
அக்ஷர தீபிகை
ஸப்தகிரி




மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனை தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள்.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர் களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.

கால பூஜைக்காக நடைமூடப்பட்டு பின்னர் வில்வ மங்கலம் சுவாமிக்கு தரிசனம் அளித்ததாகக் கருதப்படும் வேளையில், அதாவது இரண்டு மணிக்கு "மகம் தரிசனத்திற்கு" நடை திறக்கப்படும். அப்போது தேவி "சர்வாலங்கார பூஷிதையாக பக்தர் களுக்கு காட்சி தருவாள். இந்த தரிசனத்தால் திருமணமாகதவர்களுக்கு திருமணம் கைகூடும். திருமணமானவர்களுக்கு தீர்க்க சுமங்கலியாக இருக்கும் பாக்கியம் கிட்டும், அனைத்து விருப்பங் களும் நிறைவேறும் எனவும் நம்பப்படுகிறது.

இவ்வாண்டு "மகம் தொழல்" மார்ச் 12 ஆம் தேதி நடைபெறவுள்ளது. நாமும் சோட்டானிக்கரை பகவதியைத் தொழுது, அவள் ஆசியைப் பெறு வோம்!



# ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

8. ஆறாயிரப்படி என்னும் திருப்பாவை வியாக்யா னத்தை அநுக்ரஹித்த ஆசாரியர் யார்?
அழகியமணவாளப்பெருமாள் நாயனார்

9. திருவாய்மொழிக்கு தனியன்கள் க்ருபை செய்த ஆசார்யர்கள் யார்?
ஸ்ரீமந்நாதமுனிகள், ஈச்வர முனிகள், சொட்டை நம்பி, அனந்தாழ்வான் மற்றும் ஸ்ரீபராசரபட்டர்

10. திருமங்கையாழ்வார் ஏறும் குதிரையின் பெயர் என்ன?
ஆடல் மா

11. விலக்ஷணமோக்ஷாதிகாரி நிர்ணயம் என்ற நூலை அருளிய மாமுனிகளின் சிஷ்யன் யார்?
எறும்பியப்பா

12. ஸ்வாமி யாமுனாசார்யர் திருமலை திவ்யதேசத்தை சேவித்தபோது அங்கே இருக்கும் பூலபாவிக்கு வைத்த பெயர் என்ன?
அழகப்பிரானார் கிணறு

13. பெரியாழ்வார் திவ்ய பிரபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசார்யர் யார்?
செல்வ நம்பி - திருப்பல்லாண்டு

14. திருமங்கையாழ்வாருக்கு திருமந்திரார்த்தம் உபதேசித்த திவ்யதேசப் பெருமாள் யார்?
திருக்கண்ணபுரம் சௌரிராஜப்பெருமாள்

15. எந்த ஆழ்வார் ஆசார்யர்கள் இங்கு சொல்லப்பட்ட விஷயங்களைச் சொல்லி முறைப்படி அத்யந்தம் அன்பாகவும், மென்மையாகவும், அழகாகவும் இருக்கும் என்று பெரியோர்கள் நிர்வாகம்?
நம்மாழ்வார் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றும், திருமங்கையாழ்வார் "திருக்கண்ணபுரம் சௌரிராஜன்" என்றும், அனந்தாழ்வான் "திருவேங் கடமுடையான்" என்றும், பசாசரபட்டர் "அழகியமண வாளப்பெருமாள்" என்றும் அன்பாகவும், அழகாகவும், மென்மையாகவும் நிர்வகிப்பர்.

**- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**



சென்ற இதழின் தொடர்ச்சி...

# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி.

ஆதிசேஷனுடைய தலையே வேங்கடமலையாம். எனவே அம்மலையின் மேலுள்ள மணிகள் (மாணிக்கங்கள்) யாவும் ஆதி சேஷனதேயாகும். அம்மணிகள் பல நிறங்களைக் கொண்டவை. அவற்றின் ஒளியே திருமலை அனைத்திலும் பரவி பரபாக சோபையோடு விளங்குகின்றனவாம். பரபாக சோபை என்றால் ஒரு நிறம் பிரிதொரு நிறத்தோடு எடுத்துக் காட்டுவதேயாகும். (சோபை – அழகு). எம்பெருமானின் திருமேனி முழுவதும் நீல மேகத்தைப் போல் பெருமையோடு ஒளிர்கின்றது அல்லவா! இப்படிப் பட்ட சிறப்பு வாய்ந்த திருவேங்கடப் பிரபுவே! எனக்கு சுகத்தை அளிப்பாயாக என்றபடி.

எம்பெருமான் நல்ல மனிதர்கள் அனைவர்க்கும் தந்தை போன்ற ரக்ஷகன். அவனுடைய குணங்கள் எல்லார்க்கும் நன்மையாய், குளிர்ந்த தன்மை உடையனவாகும். அந்த எம்பெருமானின் வலது திருக் கையிலுள்ள ஸ்ரீஸுதர்சனாழ்வான் தூரத்தில் இருந்த சத்ருக்களுக்குப் பயத்தை உண்டாக்குகின்றான். இடது திருக் கையிலுள்ள ஸ்ரீபாஞ்ச ஜன்யத்தில் இருந்து கிளம்பும் ஒலியானது எல்லாப் பாவங்களையும் போக்குகின்றது. இப்படிப்பட்ட சிறப்பு பொருந்திய ஸ்ரீமந்நாராயணனான எம்பெருமானே பழுக்காத தான (பக்குவமற்ற) பாவங்களை உடைய என்னை சாதாரணமாக ரக்ஷிப்பாயாக! என்கிறார் அநந்த ஆழ்வார். அதாவது எம்முயற்சியும் இல்லாது தன்னுடைய இயல்பான இன்னருளாளே ரக்ஷிக்கவேண்டும் என்பது கருத்து.

பிரபுவே! பாவமான காட்டை எரிப்பதில் எரிச்சலை உண்டாக்கும் நெருப்பைப் போன்ற பெருமையுடைய உன்னுடைய திருவருளைத் தவிர பாவநிவர்த்திக்கு வேறு ஓர் உபாயம் இல்லை என்பது திண்ணம்.

இந்தச் சுலோகத்திலிருந்து ஆறு சுலோகங்கள் சரப விருத்துக்குண்டான கட்டுப்பாட்டைக் கொண்டவை.

"ஸுஜநதாததாதாயித" என்னும் பிரயோகத்திலேயே "தாதாயித" என்ற பதத்திற்குத் தந்தைபோலே நடத்துபவன் என்பது பொருள். "பாதீதி பிதா" என்ற பித்ரு சப்த வ்யுத்பத்தியானது தாத்தா, பித்ரு, சப்தமுள்ள பர்யாய வாசகத்தன்மை (ஒரு பொருட் கிளைவி), தந்தையைப் போலே ரக்ஷகன் என்ற பொருளை இந்தப் பிரயோகம் தரும். உலகில் நன்மையும் (ஹிதம்) அன்பும் ஒன்றாக இரா. "ஹிதம் மநோஹாரீச துர்லபம்" என்பதல்லவா நன்மொழி (ஸுக்தி). ஆனால் எம்பெருமானின் குணகணங்கள் நன்மை மட்டுமல்ல அன்பும் என்பது "அகில ஹித ஸுசீதல குணகணாலய" என்ற பிரயோகத்தால் தெளிவாகிறது.

"ஸகல பாபாபார பீகாரகநர வாகர ஸுதர" என்ற பிரயோகத்துக்குச் சேர "தூப்பால வெண்சங்கு" முதலிய ஆழ்வார்களின் ஆட்சி, "ஸுர்மணோ தரநி: ஸ்ருதத்வநி" முதலிய ஸுக்திகளை நினைக்கவல்லது. "ஆமாமாக ஸம்ப்ருதம்" என்றபோது ஆம சப்தமானது பக்குவமற்றது என்ற பொருளாகும். "ரமேச்வர" விளி சிறப்புடைத்து, ச்ரிய: பதியாலே பக்குவமற்ற பாவங்களாலே நிறைந்த, அதாவது மன்னிக்க முடியாத பாபியான

என்னை முழுமை யாக ரக்ஷி என்பது கருத்து. "ஆர்த்ரா பராதஸ் த்வயா ரக்ஷிந்தயா" என்று ஸ்ரீபராசரபட்டர் தெரிவிக்கிறார் (ஸ்ரீகுண ரத்னகோசம் 50). அதாவது மன்னிக்க முடி யாத பாவிக ளான ராக்ஷஸப் பெண்டிர்களை ரக்ஷித்தது ஸீதாப் பிராட்டியே அல்லவா என்றதாகும். அப்படிப்பட்ட இயல்பை உடைய (ஸ்வபாவம்) லக்ஷ்மீ தேவி புருஷ காரம் செய்ததை இந்தவிளி (ஸம்போத நம்) தெரியப்படுத்துகின்றது என்று கொள்ளலாம். "த்வக்ருபா அவது" என்ற அந்வயத்தால் (கொண்டு கூட்டுவது) பகவானுடைய எக்காரணமுமின்றி (நிர்ஹேதுகம்) கருணையே ரக்ஷிக்கப் படுகின்றதென்று உணர முடிகிறது. *''கருணா மிவ ரூபிணீம்''* என்றும் *''க்ருபயா பர்யபாலயத்''* (ஸ்ரீரா. ஸு॰ந்.) என்றும் முதலான ஸு॰க்திகள் ரக்ஷணத்தில் லக்ஷ்மியினுடைய (பெரிய பிராட்டியார்) முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

"அத$_{2}$ாரம்:" என்பதற்கு வடமொழி உரைகாரர் இரண்டு விதமான விவரங் களைக் காட்டினார். முதல் விவரணத்தில் இந்தப் பதத்திலேயே த$_{2}$காரத்தை த$_{4}$காரமாக அதாவது தவர்க்க நான்காவது எழுத்தாக கிரகித்து (உட்கொண்டு) அதன் பயனாக ஏற்படுகிற அத சப்தம் நரக மூலமான பாவங்களைத் தெரிவிக்கும் என்று அறிந்தால் அத$_{4}$ாரம் என்பதற்குப் பாவத்தை வெட்டும் கத்தியைப் போன்றது என்பதாகும். அதாவது பாவம் அழிவை அடைந்தது என்ற பொருள் வரும். அர சப்தத்துக்கு கட்கம் (கத்தி) என்ற பொருள் உள்ளது. இந்த அன்வயத்தில் விருத்த லக்ஷண பங்கதோஷம் உண்டாவதற்கு இடமுள்ளது. எப்படியெனில் சரப விருத்தத்திலேயே ஒவ்வொரு பதத்தில் இரண்டு கணமான மகணத்திலே எழுத்துக்கள் மூன்றையும் ஒரே விதமாக இருக்க வேண்டிய நியமம் இங்குப் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. "அத$_{2}$" என்ற பதத்தில் கடைசி எழுத்தானது தவர்க்கத்திலே இரண்டாவது எழுத்தாகும். இப்படி சமான வர்ண நியமத்துக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஆத$_{2}$ரம் என்றபோது தவர்க்கம் 4வது எவுத்தாகும். தகார தகாரங்கள் இரண்டும் ஒரே வர்க்கத்துக்குச் சேர்த்தனவாகையாலே, ஒரே முயற்சியை உண்டாக்குவதாகையாலே, ஒரே முயற்சியை உண்டாக்குவது. ஆகையாலே சமானவையாக ஏற்றுக் கொள்வதற்கு இடமுள்ளதாலே இந்த தோஷத்தைச் சற்று ஏற்றுக் கொள்ளலாம் என்கிறார் உரைக்காரர்.

*''அதாரமிதி தவர்க்க சதுர்த்த கடிதச் சேதே ப்ரதமயோ: தவர்க்க த்வியதீயத்வாத் த்ருதீயஸ்ய ச சதுர்த்த த்வேந ஏக ஜாதீய வர்ணகடித மகனகமித் சரப வ்ருத்த லக்ஷ்ணஸ் யலோப: தகாரதகாரயோ: ஏக வர்க்யத்வேந ஏக ப்ரயத்நத்வேந ஸமா தேய: தத்யக்ஷே ''அதாரமிதி விமோசந க்ரியா விசேஷ ணம்''* என்பது ஸம்ஸ்க்ருத வ்யாக்யான ஸு॰க்தி. இந்த அந்வயத்தில் அதாரம் என்பது விடுபட்ட வினை (விமோசனக்ரியா) விசேஷணம் ஆகும். உன்னை அடைந்தவர்களுக்கு உன்னுடைய க்ருபை (தயை) ஒன்றே சரணம் என்பது தேர்ந்த பொருள்.

இவ்வாறோடல்லாது அதாரம் என்று தவர்க்க 2வது எழுத்தை அழுத்தமாக கிரஹித்துப் பொருளைச் சொல்லலாம் ன்றும் ஸம்ஸ்க்ருத வியாக்யான ஆசிரியர் காட்டினார். தம் – அதாவது ப்ரஹ்ம நிர்வாஹம். "அதம்" என்றால் அதன் விரோதி நஞ்சு விரோதமென்ற பொருள் உண்டு. *''ஆஸமந் தாத் ஸவாஸநம்ராதி அபஹரதி இதி அரம்''.* அதாவது அனைத்தும் முழுவதுமாக நலியச் செய்யுமதனால் ஆரம் என்பதாகும். அதஸ்ய ஆரம் அதாரம் என்பதாவது ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார விரோதியான பாவத்தை முழுமையாக அனைத்தையும் நலியச் செய்கிறது என்பது கருத்து. இந்த அந்வயத்தில் முன்பு சொல்லப்பட்ட விரோதி தோஷத்துக்கு இடமில்லை. இந்தச் சுலோகத்தில் பகவானுடைய நிர்ஹேதுக க்ருபையே ரக்ஷகம் என்று சாஸ்த்ரார்தம் சொல்லப்பட்டது. *இன்னும் ஜ்வலிக்கும்...*


திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.


**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்து வதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும் போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்

## தசாவதாரப் பெருமாள்!

# சக்கரவர்த்தித் திருமகன்



ஒழுக்க நெறிநிலை உலகினர்க் குணர்த்தத்
  தந்தையர் தமக்கு மைந்தர்செய் பணிமுதற்
பொதுவற மெல்லாம் புரிந்தன னிராமன்
  அப்பணி தானும் அடைவு கெடாமை
ஒப்பறு திருமால் ஒருவனுக் கென்றே
  சிறப்பறந் தலைக்கொடு செய்தன னிலக்குவன்!
அவ்வரந் தானும் செவ்வற மாதல்
செங்கண்மா லுவந்த சேவடித் தொழும்பே
  யல்லது தனக்கொன் றில்லை யென்றாய்ந்து
பரதந் திரநெறி பற்றினன் பரதன்
  அந்நெறி யதனினும் நன்னெறி மாதவன்
அடியார்க் கடிமை யாற்றுத லென்றே
  சால்புற வொழுகினன் சத்துருக் கனனே!
இன்னண மிராமனொ டினையார் தாமும்
  ஒருவர் னொருவ ருயரறம்
பொருவிலரி புரிந்தனர் பூதலத் துதித்தே!

**மி**ருக நிலை மாறி, மானிட சுயநலங்களும் தவிர்த்து, மானிட அறத்தை முழுவதுமாகக் காட்ட, அயோத்தியர் கோமானின் அருமைப் புதல்வனாக அவதரித்து, மானிட இனத்துக்கு, அறநெறிகளையும், ஆன்மாவின் உயர்படிகளையும் "நடையில் நின்று காட்டிய உயர் நாயகன்" இராமனைச் சிறிது காணலாம்.

*''கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?''* என்று கேட்டு,

*''புற்பா முதலாப் புல் எறும்பு ஆதி ஒன்றின்றியே*
*நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்*
*நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே''*

என்று வைகுந்த வான்போகத்தை, வைத்து வாழ்வின்பமாக மாற்றிய சக்கரவர்த்தித் திருமகனின் புகழ், *''படி கொண்ட கீர்த்தி இராமாயணம்''* என்னும் பக்தி வெள்ளமாகப் பரவியது.

*''நாரணன் விளையாட்டெல்லாம் நாரத முனிவன் கூற*
*ஆரணக் கவிதை செய்தான் அறிந்த வான்மீகி என்பான்''*

*''ஊனில், உயிரில், உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே''*

என்பதற்கு ஏற்ப இராமாயணம், உடலியல், உள இயல், உயிர் இயல் மூவகையிலும் நமக்குத் தெளிவூட்டும் வேத விளக்க நூலாகத் திகழ்கிறது.

உடலியல் விளக்கமாக, சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்னும் முக்குண உருவங்களாக முறையே விபீஷணன், இராவணன், கும்பகருணன் ஆகியோரை எடுத்துக்காட்டுகிறது.

அடுத்து உயிருக்கும் உடலுக்குமிடையே உள்ள மனத்தின் தன்மையை "மனம் என்னும் குரங்கு, நின்றவா நில்லா நெஞ்சு", "சஞ்சலம் ஹி மன:" என்பதற்கேற்ப கிளைக்குக் கிளை தாவும் குரங்கு உருவினராக, வாலி சுக்ரீவர்களை அயோத்திக்கும், இலங்கைக்கும் இடையே கிஷ்கிந்தையில் வைத்துக் காட்டுகிறது. இறைவனைச் சார்ந்த சுக்ரீவன் வாழ்வும், எதிர்த்த வாலியின் கதியும் உய்த்து உணரத் தக்கது.

முடிவாக ஆன்ம இயலை, அறத்தின் படிகளை உயர்த்திச் செல்ல இறைவன் தான் முதலில் நின்று சாதாரண மானிட அறங்களை அயோத்திக்கு அரசாக வாழ்ந்து நிலை நிறுத்திக் காட்டினான்.

## பிழைதிருத்தம்

*2025, பிப்ரவரி ஸப்தகிரி மாத இதழ் பக்கம் 13இல் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி – பதில் பகுதியில், முதலாம் கேள்வியான ஸ்ரீரங்கத்தில் உக்குபல்லவராயன் மடத்தில் தன்னுடைய காலக்ஷேப மண்டபத்துக்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் வைத்த திருநாமம் திருமங்கையாழ்வார் காலக்ஷேப மண்டபம் எனக் குறிப்பிடப் பெற்றதற்கு பதிலாக திருமலையாழ்வார் கால க்ஷேப மண்டபம் என்று திருத்தி வாசிக்கவும்.*

– பிரதான ஆசிரியர்

**“ஒருவன் சொல் கேட்டு ஒருவன் நடப்பது” என்னும் கட்டுப்பாட்டை “தந்தை சொல் மிக்க மந்திர மில்லை” என்று தொடங்கி, முனிவன் ஏவலால் மணம் புரிந்து, சிற்றவை பணியால் முடிதுறந்து, அந்தணர் பணியால் அரக்கரைத் தொலைத்து, தம்பியர் சொற்படி அறந்தவறிய ஆதிக்க அண்ணன்களை அகற்றி, உலகில் அறம் தலை நிறுத்திய அண்ணல் இராமனின் சிறப்பை, சிறை யிருந்த செல்வியின் கற்புக் கனலுடன், இராமாநுஜர்களான இலக்குவன், பரதன், சத்துருக்னன் முகமாக, விசேஷ, விசேஷதர, விசேஷதமமான தர்மங்களை அதாவது சேஷத் துவம் (இறைவனுக்கு உரியனாயிருக்கை), பாரதந் தரியம் (இறைவன் இட்ட கட்டளையில் பணி புரிதல்) மற்றும் பாகவத சேஷத்வம் (அடியார்க்கு அடிமை) போன்ற ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய அறங்களை இராமாயணம் நமக்கு நல்குகிறது.**

***“சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே”*** **என்பதற்கேற்ப,** ***“வையமெல்லாம் உடன் வணங்க மன்னனாய் தோன்றி, வெய்ய சீற்றக்கடி இலங்கை குடி கொண்டோட வெஞ்சமத்து செய்த வெம்போர் நம்பரனின்” “சென்று அங்கு தென் இலங்கை செற்ற திறத்தை”*** **எடுத்துக்காட்டுகிறார் கலியன் தனது ஒலி மாலையில்.**


***நன்றி : பகவத் விஷய கட்டுரைகள் (பாகம்-1)***

## அறிவார் இல்லையே!

## வாழ்வியல் நெறிகள்

*முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவிலொரு*
*பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும் இந்த*
*படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவர்,*
*அடிசார்ந்து நாமுய்ய வேண்டும் என்றே அறிவாரில்லையே!*

– பட்டினத்தார்



பொருள் : மகுடம் தாங்கிய மன்னர்களும், மற்றவர்களும் இறுதிக் காலத்தில் ஒரு பிடி சாம்பலாக வெந்து மண்ணாவதைக் கண்கூடாகக் கண்டும், மேலும் மேலும் இவ்வுலக வாழ்வே இன்பம் என்றெண்ணிக் களிக்கின்ற மூடர்கள், தில்லை நடராஜன் திருவடிகளைப் பற்றிக் கொண்டு நாம் பிழைக்க வேண்டும் என்று உணருவோர் இல்லையே என் செய்வது.

**வாழ்வியலுக்கான கருத்து** : பிறந்தோர் அனைவரும் இறப்பதென்பது உறுதி என்பதை உணர்ந்தும், உயிர்கள் இறந்து சாம்பலாகி மண்ணாவதைக் கண்டும், உலகப் பற்றை ஒழித்து கடவுள் பற்றைக் கொள்ளாதிருப்பது எத்துணை அறியாமை என்பதை விளக்கினார். “வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்” என்றார் மற்றோரும்!

***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***



# யார் பக்தர்கள் தெரியுமா?

- பேராசிரியர்.எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி , 94861 39685

குலசேகர ஆழ்வார் திருநட்சத்திரம் மாசிப் புனர்பூசம், இந்தத் திருநட்சத்திரத்தின் சிறப்பை அற்புதமாகப் பாடுவார் மணவாளமாமுனிகள் தமது உபதேச ரத்தின மாலையில்,

*மாசிப்புனர்பூசம் காண்மின் இன்று மண்ணுலகீர்*
*தேசு இத்திவசத்துக்கு ஏதென்னில் - பேசுகின்றேன்*
*கொல்லி நகர்க்கோன் குலசேகரன் பிறப்பால்*
*நல்லவர்கள் கொண்டாடும் நாள்*

குலசேகர ஆழ்வாரின் திருநட்சத்திரத்தை நல்லவர்கள் எல்லாம் கொண்டாடுகின்றார்கள். நல்லவர்கள் என்பதற்கு ஆசார்யர்கள் சொல்லும் விளக்கம் தீதில் நன்னெறி நிற்பவர்கள். அதாவது ஸ்ரீவைஷ்ணவ நெறியிலே சிறந்து விளங்குபவர்கள், பரம ஸாத்விகர்கள், ஞான பக்தி வைராக்யங்களிலே சிறந்து விளங்குபவர்கள், பூர்வாசார்யர்களைப் போலே ஆத்ம குண பூர்த்தியை உடையவர்கள் என்று விளக்கம் அளிக்கிறார்கள்.

கொல்லிக் காவலன், கூடல் நாயகனான குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திருமொழி அற்புதமானது. அதில் முதல் திருமொழியில் *“திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும், கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என் கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே’’* என்று 10 பாசுரங்களால் திருவரங்கநாதனைப் பாடி, அடுத்த பதிகத்தில், பகவானிடம் அன்பு கொண்டவர்கள் பாகவதர்களிடமும் அன்பு கொண்டிருப்பார்கள் என்ற அடிப்படையில், அடியார்களிடம் தனக்கு இருக்கும் அன்பு மிகுதியை “தேட்டரும் திறல்” என்று ஆரம்பித்து பத்து பாசுரங்களால் பாடி, மூன்றாவது பத்தில் அழகிய மணவாளன் விஷய மாக “மெய்யில் வாழ்க்கையை” என்று ஆரம்பிக்கின்றார்.

ஆக, இந்த மூன்று பதிகங்களிலும் திருவரங்கநாதன் விஷயமாகவும், திருவரங்கநாதனின் அடியார்கள் விஷயமாகவும் பாடியவருக்கு, அடுத்த கவனம் திருமலை மீது தான் வருகின்றது.

பகவான் வைகுண்டத்தில் இருந்து, பாற்கடலுக்கு வந்து, பாற்கடலில் இருந்து திருமலையில் இறங்கி, அங்கிருந்து திருவரங்கத்தில் வந்து பள்ளி கொண்டான் என்பார்கள்.

*மந்தி பாய்வட வேங்கட மாமலை*
*வானவர்கள்*
*சந்தி செய்யநின் றானரங் கத்தர*
*வினணையான்*
*அந்திபோல் நிறத்தாடையு மதன்*
*மே லயனைப் படைத்த தோரெழில்*
*உந்தி மேலதன் றோ அடி*
*யேனுள்ளத் தின்னுயிரே.*

என்ற திருப்பாணாழ்வார் பாசுரம் இதனை விளக்கும்.

அவன் மேலே இருந்து கீழே இறங்கி வந்த அர்ச்சாவதார ரகசியத்தை நம்முடைய பெரியோர்கள், ஆழ்வார்கள் பேசுவார்கள். அவன் வந்த வழி அது. அவன் வந்த வழியே ஆராய்ந்து அதே வழியில் சென்றால் அவனை அடையலாம்.

குலசேகர ஆழ்வார் அவன் திருவரங்கத்தில் பள்ளி கொண்டானே, எங்கே இருந்து வந்து பள்ளி கொண்டான் என்பதைச் சிந்தித்து "ஆகா திருமலையில் இருந்தல்லவா இங்கு வந்து பள்ளிகொண்டான்" என்று நிர்ணயிக்கிறார். அவருடைய கவனம் திருமலைக்குப் போகின்றது.

திருவேங்கடமுடையான் விஷயமாக நம்முடைய ஊனையும், உள்ளத்தையும் உருக்கும் 11 பாசுரங்களை அருளிச் செய்கின்றார்.

மனிதனாகப் பிறப்பெடுத்தவர்கள் ஏதோ ஒரு வகையில் திருமலையோடு தொடர்பு பெற




ஸ்ரீமத்ஸ்யாவதார மூர்த்தியை அர்ச்சை வடிவில் பக்தர்கள் அனைவரும் தரிசிக்கும் வகையில் நமது பாரத தேசத்தில் சில கோயில்களில் எழுந்தருளி உள்ளார். அவற்றுள் மிகவும் முக்கியமான திருக்கோயில் நாகுலாபுரத்தில் இருக்கும் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி கோயில் ஆகும். இது திருப்பதிக்கு மிக அருகில் சென்னை செல்லும் மார்க்கத்தில் உள்ளது. நவகிரகங்களில் ஒன்றான கேது தோஷத்திற்குப் பரிகாரத் தலமாக விளங்குகிறது. இந்த ஆலயத்தில் எம்பெருமான் ஸ்ரீமஹாவிஷ்ணு வேதங்களை காத்திட்ட வேத நாராயணனாக ஸ்ரீமத்ஸ்யாவதார மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இதே போன்று கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலும் ஸ்ரீமத்ஸ்ய நாராயண ஸ்வாமி ஆலயம் உள்ளது. அங்கு வருடாவருடம் சித்திரை மாதத்தில், வளர்பிறையில் வரும் திருதியை திதியில் மத்ஸ்ய ஜயந்தி வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

நாகுலாபுரம் வேத நாராயண ஸ்வாமி ஆலயத்திலும் வருடாந்திர பிரம்மோத்ஸவம் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மேற்பார்வையில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. பிரம்மோத்ஸவத்தில் காலையும், மாலையும் ஸ்ரீவேதநாராயண மூர்த்தி விதவிதமான அலங்காரங்களில், வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி, வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். வருடாவருடம் மகர சங்கிராந்தியன்று சூரிய பகவான் மகர ராசியில் பிரவேசிப்பதை உத்தராயணம் என்று பெரியோர்கள் கூறியுள்ளனர் அல்லவா. அன்று தொடங்கி சூரியனின் வீர்யம் அதிகரித்துக் கொண்டே போகும். அப்போது அந்தக் கதிர்களின் ஒளி ஸ்ரீமத்ஸ்ய மூர்த்தியின் திருமுக மண்டலத்தில் மூன்று நாட்கள் விழுமாறு அமைந்திருப்பது இந்த ஆலயத்தின் சிறப்பு அம்சமாகும்.

வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை வீணாகி விடும். அவ்வாழ்க்கை வீணாகிப் போகாமல் விளங்க வேண்டும் என்று சொன்னால் திருமலையப்பனைச் சென்று வணங்கி உய்வு பெற வேண்டும் என்பது ஆழ்வார் திருவுள்ளம். அது இந்த பத்து பாசுரங்களிலும் வெளிப்படுகின்றது.

ஏதாவது ஒரு வகையில் திருமலையில் நித்திய கைங்கர்யம் பண்ண வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு பாடிய அற்புத பாசுரங்கள் இவை,

அதில் ஒரு பாசுரம் தான் கீழே உள்ள பதினோராவது பாசுரம். பத்து பாசுரங்கள் பாடினால் என்ன பலன் கிடைக்கும் என்பதை சொல்லுகின்ற பலச்ருதி பாசுரம் இது. முதலில் பாசுரத்தையும், பதவுரையையும் பார்ப்போம்

*மன்னியதண் சாரல் வடவேங்கடத்தான்றன்*
*பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி*
*கொன்னவிலும் கூர்வேல் குலசே கரஞ்சொன்ன*
*பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பத்தர்களே*

**இனி பதவுரை:**

கொல் நவிலும் – (பகைவர்களைக்) கொல்லு தலைப் பயின்ற, கூர் வேல் – கூர்மையான வேலா யுதத்தையுடைய, குலசேகரன் – குலசேகராழ்வார்; மன்னிய தண் சாரல் வடவேங்கடத்தான் தன் – நிலை பெற்ற குளிர்ச்சியுள்ள சாரல்களையுடைய வட வேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற பெருமானது; பொன் இயலும் சேவடிகள் – பொன்போற் சிறந்த சிவந்த திருவடிகளை, காண்பான் – சேவிப்பதற்கு, புரிந்த – ஆசைப்பட்டு; இறைஞ்சி – வணங்கி, சொன்ன – அருளிச் செய்த, பன்னிய நூல் தமிழ் – ஆராய்ந்த நூல்களிற் கூறிய இலக்கணத் துக்கு இசைந்த தமிழ்ப் பதிகத்தை, வல்லார் – கற்று வல்லவர்; பாங்கு ஆய பக்தர்கள் – அப்பெருமான் திருவுள்ளத்துக்கு இனிய பக்தர்களாவர்.

"எம்பெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு என்ன வழி" என்று கேட்டால், குலசேகர ஆழ்வார் திருவேங்கடம் விஷயமாகப் பாடிய இந்தப் பாசுரங்களை, யார் ஆழ்ந்து கற்று வல்லவர்களாக விளங்குகின்றார்களோ, அவர்கள் திருமலையப்பனுக்கு நல்லவர்கள்.

பாठ :अष्टविंशः

## ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

பாடம்-33

अम्बा शब्दः - स्त्रीलिङ्गः (பெண்பால்) (அம்மா)

| | ए | ब | ए | ब | | ए | ब |
|---|---|---|---|---|---|---|---|
| प्र | रामः | रामाः | फलम् | फलानि | प्र | अम्बा | अम्बाः |
| द्वि | रामम् | रामान् | फलम् | फलानि | द्वि | अम्बाम् | अम्बाः |
| त्रु | रामेण | रामैः | फलेन | फलैः | त्रु | अम्बया | अम्बाभिः |
| च | रामाय | रामेभ्यः | फलाय | फलेभ्यः | च | अम्बायै | अम्बाभ्यः |
| पं | रामात् | रामेभ्यः | फलात् | फलेभ्यः | प | अम्बायाः | अम्बाभ्यः |
| ष | रामस्य | रामाणाम् | फलस्य | फलानाम् | ष | अम्बायाः | अम्बानाम् |
| स | रामे | रामेषु | फले | फलेषु | सं | अम्बायाम् | अम्बासु |
| सं प्र | हे राम! | रामाः | हे फल! | हे फलानि! | सं प्र. | हे अम्ब! | हे अम्बाः! |

(ஆண்பாற் சப்தங்களை "ராம்" சப்தத்தைப் போலவும், ஒன்றன்பாற் சப்தங்களை "பழம்" (ப$_2$ல) சப்தம் போலவும், பெண்பாற் சப்தங்களை விளிவேற்றுமையைத் தவிர "அம்மா" சப்தம் போலவும்சாதாரணமாகச் சொல்லலாம்)

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

காரணம், இந்தப் பாசுரங்கள் திருமலையப்பன் மீது படிப்பவருக்கு ஈடுபாட்டை ஏற்படுத்துகின்றது. அந்த ஈடுபாடு எம்பெருமான் மீது பக்தி கொள்ள வைக்கிறது. அந்த பக்தி எம்பெருமானை நெருங்க வைக்கிறது. அந்த நெருக்கத்தின் காரணமாக எம்பெருமான் அவர்கள் மீது அன்பு கொள்கின்றான்.

தன்னை நினைப்பவர்களை, தான் பல மடங்கு நினைத்து அவர்களுக்கு உபகாரங்கள் செய்கின்றான் என்று வேதங்கள் சொல்லுகின்ற கருத்தை ஆழ்வார் இப்பாசுரத்தில் பொதிந்து சொல்லுகின்றார்.

"யார் ஒருவன் என்னையே நினைத்து எப்பொருளிலும் என்னையே காண்பானோ அவனை நான் மகாத்மா என்பேன்" என்று கீதையில் சொல்லிய வன்தானே அந்த எம்பெருமான்.

இந்தப் பாசுரத்தில் குலசேகர ஆழ்வார் திருமலை குறித்த சில நுட்ப மான விஷயங்களைச் சொல்லுகின்றார். திருமலைக்கு அருமையான அடை மொழி ஒன்றைக் கொடுத்திருப்பதைக் கவனியுங்கள். *''மன்னிய தண் சாரல் வடவேங்கடத்தான்''* ஆழ்வார் தமிழ் நிலத்தில் நின்று பாடியதால் அவன் திசையையும் சேர்ந்து வடவேங்கடத் தான் என்று குறிப்பிடுகின்றார். காரணம் தென்மலை எனப்படும் திருமாலிருஞ் சோலையிலிருந்து வேறுபடுத்திக் காட்ட வடவேங்கடம் என்கிறார்.

பொதுவாக வடக்கு என்பது தெய்வத்தின் திசை. தெற்கு என்பது முன்னோர்கள் திசை. இந்த இடத்தில் ஒரு ஆத்மாவுக்கு பிறப்பில்லாத நல்வாழ்வைத் தருகின்ற வேங்கடத்தை என்பதற்காக வடவேங்கடத்தான் என்று அருளுகின்றார்.

*''மன்னிய தண் சாரல்''* அதாவது எப்பொழுதுமே நிலை பெற்று இருக்கக்கூடிய குளிர்ச்சியான சாரல் உள்ள இடத்தை அவன் ஏன் தேர்ந்தெடுத்தான் என்று சொன்னால், அவன் நின்று இளைப்பாற என்ற சாதாரண பொருள் தோன்றும்.

ஆனால் மலையின் சிறப்புக்காக அவன் வந்து தங்க வில்லை. மலைக்கு சிறப்பு செய்வதற்காக அவன் வந்து தங்கினான். பகவான் அணிவதால், மாலைகளுக்கும் அணிகலன் களுக்கும் அழகு என்பதைப்போல அவன் வந்து தங்கியதால் திருமலைக்கு ஏற்றம் – அடுத்தது *''சென்றால் குடையாம், இருந் தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம்''* என்ற பாசுரத்தின்படி, அவன் குளிர்ச்சி பொருந்திய ஆதிசேஷ பீடத்தில் அல்லவா நின்று கொண்டிருக்கின்றான்.

இன்னொரு அர்த்தமும் உண்டு. அவன் வந்து நின்றதால் மலை எப்பொழுதும் நிலை பெற்றிருக்கக் கூடிய குளிர்ச்சியும் சார லும் நிறைந்தது ஆயிற்று. அந்த குளிர்ச்சியின் சாரலும் நம்மைப் போன்ற சம்சாரிகளுக்கு ஆற்றாமையைத் தீர்க்கும் படியாக உள்ளது.

மலைக்கு கீழே இருந்து மலை மேல் ஏறியவுடன் படிப்படி யாக அந்த நிலை பெற்ற சாரல் நம்முடைய உடலையும் உள்ளத் தையும் தழுவுகின்றதே, அந்தச் சாரல் இயற்கையிலிருந்தும், மலையிலிருந்தும் மட்டும் வந்ததல்ல, அந்த மலையில் நிற்கும் எம்பெருமானிடத்திலிருந்து வந்தது என்பது ஆழ்வார் திருவுள்ளம். அந்த குளிர்ச்சி நம் உடல் வெப்பத்தையும், உள்ள வெப்பத்தையும் ஒரு சேரப் போக்குகின்றது.

*பாசுரம் அறிவோம்...*

## மங்கள சுலோகங்கள்

*ஆபதாமபஹர்த்தாரம்*
*தாதாரம் ஸர்வஸம்பதாம் ।*
*லோகாபிராமம் ஸ்ரீராமம்*
*பூயோபூயோ நமாம்யஹம் ॥*

**ஆபத்துகளைப் போக்கக்கூடியவனும், அனைத்துப் பேறுகளையும் வழங்கக்கூடியவனும், உலகத்திற்கு இனிமையானவனும் ஆகிய அந்த இராம பிரானை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்.**



# குறுக்கெழுத்துப் புதிர் -104

## இடமிருந்து வலம்


1. சுக்கிராச்சாரியார் பெயரைக் குறிப்பிடுவது ...(5)த் தீர்த்தம்
3. வான பகீரதன் கொணர்ந்தது ...(6) தீர்த்தம்
8. நெருப்புத் தீர்த்தம்....(4)
10. தேவகுருவைக் குறிப்பது ...(6) தீர்த்தம்
12. தேவலோகத் தலைவனின் பெயர் கொண்டது ...(4) தீர்த்தம்
16. வியாசரின் தந்தை பெயர் கொண்டது ...(4)த் தீர்த்தம்
18. சிவ பூஜைக்குரிய இலையின் பெயர் கொண்டது...(3) தீர்த்தம்.

## வலமிருந்து இடம்

02. மன்னார்குடியில் உள்ள மூலவரின் பெயரிலுள்ளது ...(4) தீர்த்தம்
05. திருமலை கோயிலுக்கு வடமேற்கில் இருப்பது ...(3) தீர்த்தம்
06. மகளிருக்கு மோக்ஷம் அளிப்பது ...(4) தீர்த்தம்
14. சுதர்சனரின் பெயர் கொண்டது ...(4) தீர்த்தம்.
18. மஹா...(3)(பெருமாள்) தீர்த்தம்.
19. திருமலை திருக்கோயிலை ஒட்டியுள்ளது ...(8) தீர்த்தம்

## மேலிருந்து கீழ்

1. தீவினைகளைத் தீர்ப்பது ...(5) தீர்த்தம்
03. அனுமன் பெயரில் அமைந்து இருப்பது ...(5) தீர்த்தம்
04. இளமைப் பொழிவது...(5)த் தீர்த்தம்
07. திருமாலின் 3ஆம் அவதாரத்தைக் குறிப்பது...(3)த் தீர்த்தம்
10. ஸ்ரீகிருஷ்ணரின் மகன் பெயர் கொண்டது...(6) தீர்த்தம்
12. விருப்பம் என்கிற பெயர் கொண்டது ...(3) தீர்த்தம்




தொகுப்பு : திரு.டி.ஆர்.மனோகர், தஞ்சை, 99426 44807.

புதிருக்கு விடை அறிய 26ம் பக்கம் பார்க்கவும்...

13. ....(3) தீர்த்தம் திருப்பதி மலையடிவாரத்தில் உள்ளது.
15. விஷ்ணுவைக் குறிக்கின்ற பெயர் கொண்டது ...(3)

## கீழிருந்து மேல்

08. கண்ணபிரானின் பேரன் பெயர் கொண்டது...(5)த்தீர்த்தம்
09. ...(4) பரமாத்மா தீர்த்தம்.
11. பெண் பாம்பு பெயருள்ளது ...(3) தீர்த்தம்
12. புராணப்பெயர் கொண்டது ...(4) தீர்த்தம்
17. போர் பூமி பெயர் கண்டது ...(5)த் தீர்த்தம்
18. பரமபதத்தில் உள்ள ஆறு...(5)
19. முருகக்கடவுளின் பெயர் கொண்டது...(7) தீர்த்தம்

திருமலை திவ்ய திருத்தலத்தில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அதே போன்று அனைவரையும் "கோவிந்தா " என்றே அழைத்திடுங்கள்.





மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

திருவேங்கடமுடையானின் பெருமைகளை அதுவரை கேட்டுகொண்டிருந்த சௌனகாதி முனிவர்கள் அதன் பிறகு "ஸ்வாமி திருவேங்கடவனின் அர்ச்சனை வைபவத்தைக் குறித்துத் தாங்கள் எங்களுக்கு விளக்கிடுங்கள்?" என வினவினர். "உண்மைதான்! கபில மஹா முனி சேஷனிடத்தில் ஒரு முறை இதைப் பற்றி கருத்தறிய முற்பட்டார். அப்பொழுது ஹரிக்கு மிகவும் விருப்பமானது, மறை பொருளானது, பாபங்களைப் போக்கக் கூடியது, மிகவும் சிறப்பானது ஸ்வாமி அஷ்டோத்திர சத நாமாவளியோடு செய்யும் கைங்கர்யம் என்னும் பூஜை நெறிமுறைகளைக் குறித்து உபதேசித்தார். அந்த கபில மஹாமுனியே எனக்கு இந்த அஷ்டோத்தர சத நாமாவளியோடு செய்ய வேண்டிய பூஜை நெறிமுறைகள் பற்றி விளக்கினார். அதைத்தான் நான் உங்களுக்கு எடுத்துக் கூறினேன் என்று சொல்லி முடித்தார்.

சூத மகரிஷி நைமிசாரண்ய முனிவர்களுக்கு வேங்கடாத்ரியைக் குறித்தும், ஸ்ரீநிவாச கைங்கர்ய நெறிமுறைகள் பற்றியும் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கவும், அதைக்கேட்ட முனிவர்கள் வேங்கடாத்ரியைத் தரிசிக்க வேண்டும் என்னும் தங்கள் விருப்பத்தை சூத மகரிஷியிடம் பணிவுடன் தெரிவித்துக் கொண்டனர்.

## நைமிசாரண்ய முனிவர்கள் வேங்கடாத்ரியைச் சென்றடைதல்

இதைக்கேட்ட சூதமகரிஷி உடனே, "முனிவர்களே! நான் இதுவரை சொல்லி வந்த இக்கதைகளினால் பயன் உண்டானது. உங்கள் ஆர்வத்தைக் கண்டு நான் மிகவும் மகிழ்கிறேன். தாமதிக்காமல் இப்பொழுதே உடனே புறப்பட்டுச் செல்லுங்கள். மலைச் சிகரங்களை தரிசனம் செய்யுங்கள்.

வேங்கடாத்ரி வைபவத்தைக் கண்குளிர காணுங்கள். புண்ணியத் தீர்த்தங்களில் நீராடுங்கள். பூவராஹ ஸ்வாமியைச் சென்று சேவியுங்கள்" என அனுமதி தந்தார். சூத மகரிஷியின் அனுமதி பெற்ற பின்பு கௌதமர், ஜாபலி, கஸ்யபர், அங்கீரசர், ஸ்ரீவத்ஸர், கௌத்ஸர், மைத்ரேயர், கண்வர், கார்கேயர், முருகண்டர், பரத்வாஜர், கௌஸிகர், தேவலர், க்ருது, புலண்யர் முதலானோர் யாத்திரையாகப் புறப்படுவதற்குத் தயரானார்கள்.

கங்கையில் நீராடினார்கள். மேலும் கௌதமி மற்றும் கிருஷ்ணா நதிகளிலும் புனித நீராடினார்கள். வழி நெடுகிலும் உள்ள அநேக தீர்த்தங்களிலும் நீராடினர். ஸ்வாமியைத் தரிசிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தோடு பாவன தீர்த்தம், கபில தீர்த்தம் வந்து சேர்ந்தார்கள். அந்தத் தீர்த்தங்களிலேயும் புனித நீராடி, இறைவனைத் துதித்த வண்ணம் ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி பின்பு ஸ்ரீநிவாசனைத் தரிசனம் செய்தார்கள்.

முனிவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சிலர் தங்கள் ஜடாமுடி மேலும் கீழும் ஆடும்விதமாக மகிழ்ச்சியில் கூத்தாடினார்கள். சிலர் ஆனந்த பரவசத்

தில் களிப்புற்றனர். சிலர் ஆவேசம் கொண்டு குரல் உயர்த்தி கூத்திட்டார்கள். சிலர் இசை யோடு வேத ஸூக்தங்களை இசைத்தார்கள். ஸ்வாமியின் நூற்றியெட்டு திவ்விய நாமங் களைச் சேவித்தார்கள். முனிவர்களின் பக்திக்கு பரவசமான ஸ்ரீநிவாசன் முனிவர்களுக்குத் திருக்காட்சி கொடுத்தார். முனிவர்களே! நீங்கள் இங்கு வந்ததினால் உங்களுடைய பக்தியின் மேன்மையைப் புரிந்து கொண்டேன். உங்கள் பக்தியைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றேன். உங்களுக்கு என்ன வரம் வேண்டுமோ கேளுங்கள். அதை நான் உங்களுக்கு வழங்குகிறேன் என்றார். இதைக்கேட்ட முனிவர்கள் ஸ்வாமியின் அனுகிர ஹத்தைக்கண்டு மிகவும் மகிழ்ந்தனர்.

பரபிரம்மனே! வைகுண்ட வாசனான தாங்கள் வேங்கடாத்திரியில் நிலைபெற்று நின்றீர்கள். உம்மை

## திருமலையப்பனுக்கு தெப்போத்ஸவம்

**ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசி முதல் பௌர்ணமி (மார்ச்–ஏப்ரல் மாதங்களில் வரும்) வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு தெப்போத்ஸவம் நடைபெறும்.**

**இத்தெப்போத்ஸவத்தின் முதல் நாள் ஏகாதசி அன்று மாலை 6 மணிக்கு திருமலையில் ஸ்வாமி புஷ்கரணியில் சீதாராம லக்ஷ்மண ஸ்வாமி தெப்போத்ஸவத்தில் திருவுலா வந்து காட்சியளிப்பார். முதலில் உற்சவ மூர்த்திகளான சீதாராம லக்ஷ்மணர் ஆலயத்திலிருந்து எழுந்தருளி திருமாடவீதி உலா வந்து திருக்குளத்தினை அடைந்து, அழகிய தெப்பத்தில் எழுந்தருளுவர். ஜொலிக்கும் விளக்கொளியில், வேத நாத ஒலி ஒலிக்க, மங்கள வாத்யங்கள் முழங்க, அன்னமய்யாவின் சங்கீர்த்தனைகளை இசைக்க ஸ்ரீசீதாராம லக்ஷ்மணர் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் மிகவும் அழகாக மூன்று முறை வலம் வரும் அழகை திருக்குளக்கரையில் அமர்ந்திருக்கும் பக்தகோடிகள் கண்டு களித்து ஸ்வாமியின் திருவருளைப் பெறுவர். திருவுலா முடிவடைந்த பின்னர் ஸ்வாமிக்கு நைவேத்தியம், கற்பூர ஹாரதி நடைபெறும். அதன் பின்னர் சீதாராம லக்ஷ்மணர் சத்ர சாமரங்கள் மரியாதையுடன் ஆலயத்திற்கு திரும்புவதோடு முதல் நாள் தெப்போத்ஸவம் நிறைவு பெறும்.**

**இதே போல் தெப்போத்ஸவத்தின் இரண்டாம் நாளான துவாதசியன்று ருக்மணி கிருஷ்ணர் திருமாட வீதிகளில் உலா வந்து தெப்பத்தில் எழுந்தருளி, திருக்குளத்தில் மும்முறை திருவுலா வந்த பிறகு, நைவேத்தியம், மங்கள ஹாரதி ஆன பிறகு ஆலயத்திற்கு திரும்புவர்.**

**மூன்றாம் நாளான திரயோதசி அன்று ஸ்ரீதேவி பூதேவி சமேத திருமலையப்ப ஸ்வாமி தங்கத் திருச்சியில் சர்வ அலங்கார பூஷிதனாக சத்ர சாமர மரியாதையுடன் திருமாடவீதிகளில் எழுந்தருளி திருக்குளத்தை அடைந்து, அங்கு அழகாக அமைத்த தெப்போத்ஸவ மண்டபத்தில் எழுந்தருளி, வேதங்கள் ஒலிக்க, மங்கல நாதங்கள் முழங்க, திருக்குளத்தில் மும்முறை வலம் வந்து ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு நல்லருளை அருளுவார். நைவேத்தியம், ஹாரதி நடைபெற்ற பின்னர் ஆலயத் திற்கு திரும்புவார். நான்கு மற்றும் ஐந்தாம் நாளும் நடைபெறும். தெப்பத்தின் சுற்றுகளும் 5, 7 என பெருகிடும். பௌர்ணமி நாளில் நடைபெறும் ஐந்தாம் நாள் மஹோத்ஸவம் மிகவும் அழகான பௌர்ணமி சந்திர ஒளி யில் கோடைக்கால தொடக்கத்தில் குளிர்ந்த நீரில் திருமலையப்ப ஸ்வாமியின் அழகைக் காண கண்கள் கோடி வேண்டும்.**





பாரதியாரின் பொன்மொழி
வாழ்க்கையின் வழிகாட்டி

## “இளைத்தல் இகழ்ச்சி”

*களிபடைத்த மொழியினாய் வா வா வா*
*கடுமை கொண்ட தோளினாய் வா வா வா*
*தெளிமை பெற்ற மதியினாய் வா வா வா*
*சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா*

“இளைப்பது’ என்றால் பொலிவு இல்லாத முகம், தெளிவு குறைந்த விழிகள், ஒலி மங்கிய குரல், ஒளி இழந்த மேனி, கிலி பிடித்த நெஞ்சம், வலிமையற்ற தோள்கள் என்று வரிசைப்படுத்துகிறார் பாரதி. இந்த நிலையானது ஓர் தனி மனிதனுக்குமட்டும் இல்லை. ஒட்டுமொத்த சமுதாயத்திற்கே, ஏன் நாட்டிற்கும் கூட நீங்க வேண்டுமானால் மேலே கூறிய ‘ஒளி படைத்த கண்ணினாய்’ பாடல் வரிகளை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். உடலிலும், உள்ளத்திலும், அறிவிலும், ஆரோக்கியத்திலும் சிறந்து விளங்க வேண்டும். எனவே சிறார்களே இறைச் சிந்தையோடு இதை மனதில் வைத்துக் கொண்டு செயல்படுங்கள்.

**டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை**
**மகாகவி பாரதியார் வம்சாவளி**

நாங்கள் நாள்தோறும் மனதால் தரிசித்துக் கொள்பவர்கள். இருப்பினும் இன்று தங்களின் திவ்யமங்கல வடிவத் திருமேனியை வேங்கட மலையில் கண்குளிரத் தரிசிக்கும் பெரும் பேறு பெற்றோம். புண்ணியப் பலன்கள் பெற்றோம். இதை விட வேறு வரங்கள் எமக்கு எதற்கு? எங்களுக்கு மோட்சம் அடைவதற்கான வழியைக் காட்டுங்கள். அதுபோதும். அதுவே நாங்கள் உம்மிடம் வேண்டும் வரம் என்றனர்.

எம்பெருமானும் முனிவர்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தவராய் “முனிவர் களே! நீங்கள் சாமானியர்கள் அல்லர். பரிபூர்ணத் துவம் பெற்றவர்கள். மிகவும் சிறந்தவர் கள். எனவே தான் வரம் ஏதும் எமக்கு வேண்டாம் எனக் கூறினீர் கள். பரம சாந்த குணம் உடையவர்கள். எனவே பொதுவாக அனைவரும் கேட்கும் வரங்களை நீங்கள் கேட்கவில்லை. உங்கள் மனதில் என்ன உள் ளது என்பதை தெரிந்துக் கொள்ளவே அப்படி நான் உங்களிடம் கேட்டேன். உங்களின் வேண்டுதல் என்னை மிகவும் பரவசப்படுத்தியது. நீங்கள் விரும் பியவாறே மோட்சத்தை அளிக்கின்றேன்” என்றார்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

*திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி*

## திருமலைக்கு நடந்து செல்லும் பக்தர்களின் கவனத்திற்கு

- 60 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு, கீல்வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோர் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.
- இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டவர்களும், பருமனானவர்களும் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.
- மலை ஏறும்போது ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் மிக உயரத்தில் குறைவான ஆக்சிஜன் செறிவும் இதய பாதிப்பு மற்றும் ஆஸ்துமாவை மேலும் மோசமாக்கலாம்.
- நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்கள் வழக்கமாக பயன்படுத்தும் மருந்து களை தவறாமல் தங்களுடன் கொண்டு வருதல் வேண்டும்.
- மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் அலிபிரி நடைபாதையில் உள்ள படி எண். 1500 காலி கோபுரம் மற்றும் இராமானுஜர் சன்னதி அருகில் உள்ள மருத்துவ மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- திருமலையில் 24/7 மணி நேரமும் அஸ்வினி மருத்துவமனை மற்றும் முதலுதவி மையங்கள் செயல்படுகின்றன.
- நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு அவசர டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்கு திருப்பதி ஸ்விம்ஸ் மருத்துவமனையும் உள்ளது.



– திரு.எம்.எஸ்.சுகுமார்,
சென்னை,
8838252312.

# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**சூத்திரம் 31 :** *"ததா ஸர்வாவரணமலா பேதஸ்ய க்ஞானஸ்யானந்தத்யாஜ்"*

கிலேச கர்மங்கள் அழிந்த பின் மூடப்பட்ட அசுத்த அழுக்காறு, மறைந்த பின் சித்தத்தின் பிரகாசம் எல்லையற்றுப் போய் அறிய வேண்டிய வஸ்து அதாவது விஷயம் சொற்பமே மிஞ்சியிருக்கும்.

**சூத்திரம் 32 :** *"தத: க்ருதார்த்தானாம் பரிணாமக்ரம் ஸமாப்திர் குணானாம்"*

குணங்கள் (சத்துவம், ராஜஸம், தாமஸம்) தன் சிருஷ்டி காரியத்தை முடித்துக் கொண்டு பரிணாம மாறுதல் கிரம சிருஷ்டியையும் முடித்துக் கொள்கின்றன. குணங்களின் இயக்கம் போகத்தையும், மோட்சத்தையும் சிருஷ்டிப்பதற்காகவே இருக்கும். ஜீவாத்ம புருஷனுக்கு மோட்சம் ஏற்படும் வரை பரிணாம கிரமத்தை (சரீரம் புலன்களை சிருஷ்டி செய்வது) தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கும்.

**சூத்திரம் 33 :** *"க்ஷணப்ரதியோகீ பரிணாமாபராந்த நிர்காராஹ்ய: கிரம:"*

நொடிக்குநொடி மாறுதல் அடைந்து முடியும் போது மிக நுண்ணிய நோக்கு கொண்டு அந்த கிரமம் அறிந்து கொள்ளப்படுகிறது. தர்மி என்ற பொருள் தன் ஒரு இயல்பை விட்டு வேறொரு இயல்புக்கு மாறுவது பரிணாமம் எனப்படுகிறது. கால மாற்றங்களில் தொடர்ந்து மாறுதல்கள் நிகழ்கின்றன. அவற்றின் இடையில் இருக்கப்படும் கிரமத்தை பரிணாம கிரமம் என்று கூறுவர். அதாவது நொடிக்குநொடி வித்தியாசப்படும் பரிணாமத்தில் கிரமம் என ஒன்று இருக்கிறது. நுண்ணிய மாறுதல் உண் டாகும்போது அதை கிரகிக்க முடியாது. தொடர்ந்து மாறுதல் அடையும் போது ஒரு கட்டத்தில் அந்த மாறுதல் தூலமாக நன்கு புலப்படுகிறது. நுண்ணியமாக இருக்கும்போது வித்தியாசம் தெரியாது.

*முற்றும்....*

## குறுக்கெழுத்துப்புதிர் 104க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | ர் | க் | க | வ | தே | சு | 2 வா | த | | | |
| ப | 3 ஆ | கா | ச | க | ங் | கை | | த் | | ண | |
| வி | ஞ் | 4 கு | லி | பா | 5 ஜ | | | ரு | | ஷ் | |
| நா | ச | மா | ம | ம் | த | 6 சீ | | நி | | ரு | |
| ச | நே | ர | | | 7 வ | | | 8 அ | க் | 9 கி | னி |
| கா | ய | தா | | | ரா | | | | ள | சு | ய |
| தி | | ர | 10 பி | ர | க | ஸ் | ப | தி | க | 11 வா | ணி |
| 12 இ | ந் | தி | ர | 13 க | க் | 14 ச | | ந | த | | ம |
| ஷ் | | 15 நா | த் | பி | | | | ஜா | த் | | ர |
| ட | | ரா | யு | ல | 16 ப | ரா | ச | ர | 17 யு | | பி |
| | | ய | ம் | | | ணு | ஷ் | 18 வி | ல் | வ | ப் |
| | | ண | ன | ணி | ர | க | ஷ் | பு | மி | வா | 19 சு |



# திருமலையப்ப ஸ்வாமி உகாதி ஆஸ்தானம்

தேவாதிதேவனான விஷ்ணு பகவான் திருவைகுந்தத்தை விடுத்து பூமிக்கு இறங்கி வந்தார். வரும்பொழுது திருவைகுந்தத்தில் இருக்கும் மலைகள், அருவிகள், தீர்த்தங்கள் என அனைத்தையும் உடன் கொண்டு வந்தார். உபய தேவியர் ஸ்ரீதேவி பூதேவியரோடும், கருடனோடும், பிற பரிவாரங்களோடும் வந்தார்.

அப்பரந்தாமன் திருவைகுந்தத்திலிருந்து இப்பூவுலகில் வேங்கடமலையில் திருவேங்கட முடையானாக எழுந்தருளினார். அந்த நாள் முதற்கொண்டு வைகானச ஆகமம்படி அர்ச்சனைகள், உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. வைகானச தீக்ஷிதர் வம்சத்தினைச் சார்ந்தவர்கள் பரம்பரை பரம்பரையாக திருவேங்கடவனுக்கு கைங்கர்யங்களைச் செய்து வருகின்றனர்.

திருவேங்கடமுடையானுக்கு தெலுங்கு சாம்பிரதாயப்படி உகாதியன்று அதாவது தெலுங்கு வருடப் பிறப்பு முதல் நித்திய உத்ஸவங்கள் துவங்கி உகாதிக்கு முந்தைய நாளில் நிறைவடையும்.

திருமலையில் உகாதி தினத்தன்று முதன் முதலில் வருடாந்திர உத்ஸவமான "திருமலையப்ப ஸ்வாமி உகாதி ஆஸ்தானம்" நடைபெறும். இதனை "உகாதி கொலுவு" என்றும், "உகாதி தர்பார்" என்றும் கூறுவர்.

உகாதி ஆஸ்தானம் திருமலை ஆலயத்திற்குள் தங்க வாயில் முன்பாக உள்ளதிருமகாமணி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடை பெறும்.

ஆலய அர்ச்சகர்கள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள், ஏகாங்கிகள், வேத பண்டிதர்கள், தி.தி.தே.உயர் அதிகாரிகள், பொறுப்பாண்மைக்குழுவினர், ஆலய ஊழியர்கள் மட்டுமே ஆனந்த நிலையானின் உகாதி ஆஸ்தானம் நிகழ்ச்சியில் பங்கு கொள்வர். மற்றவர்களுக்கு இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ள அனுமதி இல்லை. அதே போன்று இந்நிகழ்ச்சியைப் புகைபடமாகவோ, வீடியோவாகவோ எடுக்கவும் அனுமதி இல்லை. இந்த உகாதி ஆஸ்தானம் உத்ஸவத்தை நினைத்தாலே ஒவ்வொரு பக்தரும் தம் உள்ளத்திலேயே அந்த திருமலையப்ப ஸ்வாமியை மனதார தரிசிக்க இயலும்.

### ஏகாந்தமாக திருமஞ்சனம்

உகாதியன்று திருமலை ஆலயத்தில் சுப்ரபாதம், தோமாலை சேவை நடைபெற்ற பின்னர் உபய நாச்சியரோடு திருமலையப்ப ஸ்வாமிக்கும், விஷ்வக் சேனருக்கும் ஏகாந்தமாக திருமஞ்சனம் நடைபெறும்.

ஒரு வேளை உகாதி வெள்ளிக்கிழமையன்று வந்தால் திருவேங்கடமுடையானின் மூலமூர்த்திக்கு முதலில் அபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் முடிந்த பின்னர் திருவேங்கடமுடையானுக்கு விசேஷமான வைரங்கள் பதிக்கப்பட்ட கிரீடம், சங்கு, சக்கரம், வரதம், கடி ஹஸ்த கவசங்களால் அலங்கரிப்பர்.

பின்னர் திருவேங்கடமுடையானுக்கு துளசியால் சகஸ்ரநாம அர்ச்சனையும், நிவேதனமும் சமர்ப்பிப்பர்.

### தங்க சர்வபூபால வாகனத்தில் உபய நாச்சியருடன் திருமலையப்ப ஸ்வாமி

தங்கவாயில் முன்னதாக அமைந்துள்ள மகாமணி மண்டபத்தில் தங்கத்தினாலான சர்வபூபால வாகனத்தில் ஸ்ரீதேவி பூதேவியோடு திருமலையப்ப

ஸ்வாமி கிழக்குத் திருமுகமாக எழுந்தருளுவார். பின்னர் பட்டு பீதாம்பரத்தால், வைரம், வைடூரியம், மாணிக்கங்களாலான சர்வ ஆபரணங்களாலும், வைர கிரீடத்தாலும், நறுமணம் மிக்க மலர்களாலும் ஸ்வாமியை அலங்கரிப்பர்.

### சேனாதிபதி

திருமலையப்ப ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் சர்வபூபால வாகனத்திற்கு அருகிலேயே மற்றொரு பீடத்தில் தெற்குத் திருமுகமாக சேனாதிபதியான விஷ்வக்சேனரை எழுந்தருளச் செய்து திவ்ய ஆபரணங்களாலும், பூக்களாலும் அலங்கரிப்பர். திருக்கரத்தில் வாள் ஏந்தியபடி பயபக்தியோடு ஸ்வாமியின் கட்டளையை ஏற்று செயல்படுத்துவதற்குத் தயாராக இருக்கும் விதமாக விஷ்வக்சேனர் வீற்றிருப்பார்.

பின்னர் ஆனந்த நிலையத்தில் கொலுவீற்று இருக்கும் திருவேங்கடமுடையானுக்கும், தங்க வாயில் முன்பாக வீற்றிருந்து "உகாதி தர்பார்"க்குத் தயாராக இருக்கும் உற்ஸவ மூர்த்திகளுக்கும், சேனாதிபதியான விஷ்வக்சேனருக்கும் கீழ்க்காணும்படியாக மாவு பொருட்களாலான நிவேதனத்தைச் சமர்ப்பிப்பர்.

### மாவு பொருட்களாலான சிறப்பு நிவேதனம்

திருமலை திருக்கோயில் அர்ச்சகர்கள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீசிறிய ஜீயர் சுவாமிகள், ஏகாங்கிகள், ஆசார்ய புருஷர்கள், வேத பண்டிதர்கள், தேவஸ்தான செயலாட்சித் தலைவர், பிற அதிகாரிகள், தேவஸ்தான பொறுப்பாண்மைக் குழுவினர், திருமலை ஆலய ஊழியர்கள் என அனைவரும் சத்ரசாமரங்களுடன் மங்கல வாத்தியங்களும் முழங்கிட, வேத பாராயணதாரர்கள் வேதபாராயணம் ஓதி கொண்டிருக்க, மடைப்பள்ளியில் தயாராக வைக்கப்பட்டிருக்கும் சிறப்பு நைவேத்தியங்களை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்திட ஊர்வலமாகக் கொண்டு வருவர்.

லட்டுகள், வடைகள், தோசைகள், கொண்டைக் கடலை மாவினால் செய்யப்பட்ட நிவேதனங்கள், சக்கரைப் பொங்கல், மிளகு பொங்கல், புளியோதரை, ததியோதனம், கொண்டைக்கடலை, அன்னப்பிரசாதம் என விமான பிரதக்ஷிணமாக தங்கக் கிணறு அருகில் உள்ள மடைப்பள்ளியில் இருந்து கொண்டு வந்து வெள்ளி வாயில் எதிராக உள்ள கொடி மரத்தை வலம் வருவர். பின்னர் ஆலயத்திற்குள் சென்று, கர்பாலயத்தில் அதாவது தங்க வாயில் அருகில் ஆஸ்தானத்தில் நிவேதனத்திற்காக வைப்பர். மணி அடித்தவுடன் இரண்டு இடங்களிலும் சிறப்பு நிவேதனம் நடைபெறும்.

இவ்வாறாக இரு இடங்களில் சிறப்பு நிவேதனம் முடிந்தவுடன் வஸ்திரம் சமர்ப்பித்தல் துவங்கும்.

### பட்டு வஸ்திரம் சமர்ப்பித்தல்

நிவேதனம் நிறைவடைந்த பின்னர், விமான பிரதக்ஷிணையில் ஈசான்ய மூலையில் யோக நரசிம்ம ஸ்வாமி சன்னதி அருகில் உள்ள பரிமளம் அறை அருகிலிருந்து ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள் பெரிய வெள்ளித் தட்டில் ஆறு பெரிய பட்டு வஸ்திரங்களை வைத்து, அதனை தனது சிரசின் மீது தாங்கியபடி சத்ரசாமரங்களோடு மங்கள வாத்தியங்கள் முழங்க, பஞ்சசாமரங்களோடு பஞ்சமுகத் தீப்பந்தங்களின் ஒளிகளோடு, மெல்லிய டோலு, வெண்கல மணிகள் தட்டியபடி, பாராயணதாரர்கள் வேத பாராயணங்கள் ஓதுவர். இவர்களுக்கு அடுத்தபடியாக ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள், ஏகாங்கிகள், தேவஸ்தான செயலாட்சித் தலைவர், உயர் அதிகாரிகள் எனச் செல்ல வெள்ளி வாயில் முன்பாக உள்ள கொடி மரத்தையும், பலிபீடத்தையும் வலம் வந்து பின்னர் விமான பிரதக்ஷிணம் செய்து தங்க வாயில் அருகே வருவர். சன்னதி கொல்லர் தீப்பந்தத்துடன் பட்டு வஸ்திரங்களைச் சுமந்தபடி வரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜீயர் சுவாமி குழுவினரை அழைத்துக் கொண்டு குலசேகரப்படி அருகில் நிற்பார். ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள் பட்டு வஸ்திரங்களை ஆலய அர்ச்சகரிடம் வழங்கிட குலசேகரபடி திரையிடுவர்.

கர்பாலயத்தின் உள்ளே ஜீயர் சுவாமிகள் வழங்கிய ஆறு பட்டு வஸ்திரங்களில் நான்கினை வேங்கடவனுக்கு சமர்ப்பிப்பர். கிரீடத்திற்கும், வாளிற்கும், ஆதிதோமாலை யாகவும், உத்தரீயமாகவும் அலங்கரிப்பர். பின்னர் திரையை விலக்கி திவ்ய மங்கல கற்பூர நீராஜனம் நடைபெறும்.

### சந்தனம், தீர்த்தம், சடாரி பெறுதல்

முதலில் அர்ச்சகர் தானே சந்தனம் தீர்த்தம் சடாரியை ஏற்று பின்னர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள், ஏகாங்கிகள், ஆசார்ய புருஷர்கள், தாள்ளபாக்க வம்சத்தினர் எனும் வரிசைபடி தீர்த்தம், சடாரி, சந்தன தாம்பூலம் அளிப்பார். பின்னர் தேவஸ்தானம் செயலாட்சித்தலைவர் அவர்களுக்கும், இதர அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

### உகாதி ஆஸ்தானத்தில் ஸ்வாமிக்கு வஸ்திரம் சமர்ப்பித்தல்

ஆறு பட்டு வஸ்திரங்களில் மூல மூர்த்திக்கு சமர்ப்பித்த நான்கு போக மீதம் உள்ள இரண்டு வஸ்திரங்களை ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள் வெள்ளித் தட்டில் வைத்து சிரசில் சுமந்த படி தங்க வாயில் முன்பாக உகாதி ஆஸ்தானம் நடைபெறும் இடத்திற்கு வருவார். அங்கு கொலுவீற்றிருக்கும் உத்ஸவ மூர்த்தி யான திருமலையப்ப ஸ்வாமிக்கு ஒன்றினையும், சேனாதிபதி விஷ்வக்சேனருக்கு ஒன்றினையும் சமர்ப்பிப்பர்.

### அக்ஷதை

பிரதான அர்ச்சகர் திருவேங்கடவனின் திருப்பாதத்தின் கீழ் வைக்கப்பட்டு இருக்கும் வஸ்திரத்தால் பரிவட்டம் கட்டிக் கொண்டு ஸ்வாமி, விஷ்வக்சேனர் மீது குங்குமாக்ஷதைகளைத் தூவுவார். பின்னர் சேனாதிபதிக்கு பரிவட்டம் கட்டி ஸ்வாமியின் திருப்பாதங்கள் மீது இருக்கும் அக்ஷதையை எடுத்து கொண்டு விஷ்வக்சேனர் மீது தூவி சடாரி மரியாதையைச் செய்திடுவார்.

### ஆனந்த நிலையானுக்கு ஆசீர்வசனம்

திருவேங்கடமுடையான் அர்ச்சகருக்கு அரிசி தானம் தாம்பூலத்துடன் தக்ஷிணை வழங்கிடுவார். தக்ஷிணைப் பெற்ற அர்ச்சகர் "நித்யைச்வர்யோபவ!" என்று ஆனந்தநிலையானை ஆசிர்வசனம் செய்திடுவார். பின்னர் பிரதான அர்ச்சகருக்கு மற்றொரு அர்ச்சகர் பரிவட்டம் கட்டி சடாரி மரியாதையைச் செய்திடுவார்.

### உகாதி ஆஸ்தானத்தில் பஞ்சாங்கம் வாசித்தல்

சர்வபூபால வாகனத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீதேவி பூதேவி உடன் உறை திருமலையப்ப ஸ்வாமியின் திருப் பாதங்களின் கீழ் வைக்கப்பட்டு இருக்கும் புதிய ஆண்டின் பஞ்சாங்கத்தை ஸ்வாமிக்கு சமர்ப்பித்து அர்ச்சகர் ஆஸ்தான சித்தாந்தியிடம் வழங்கிடுவார்.



ஆஸ்தான சித்தாந்தியும் ஸ்வாமிக்கு அன்றைய தின திதி, வார, நட்சத்திரங்களோடு புது ஆண்டின் பலன்களையும், இலாபநஷ்டம், நவக்கிரக சஞ்சாரம், சஸ்யவ்ருத்தி, பசுவ்ருத்தி போன்றவற்றோடு 27 நட்சத்திரங்களின் கந்தாய பலன்கள், வரவு செலவுகள் என பஞ்சாங்கம் வாசித்தலின் போது கூறுவார். பின்னர் "ஸ்வாமி! அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகா! ஆதிமத்யாந்த ரஹிதா! ஜகதேகசார்வ பௌமா! ஸ்ரீராஜாதிராஜ பரமேஸ்வரா! நித்ய கல்யாண சக்கரவர்த்தி! ஸ்ரீமதல மேல்மங்க ஸ்ரீ, ஸ்ரீமதானந்த நிலையவாசா! பஹுபராக் பஹுபராக் ஸ்வாமி!" என்று கூறுவார்.

ஸ்வாமி! தாங்கள் திருவைகுந்தத்தை விடுத்து இப்பூலோகத்தில் அவதரித்த நட்சத்திரம் அற்புதமான திருவோண நட்சத்திரமாகும். இந்தப் புது வருடத்தில் தாங்கள் பக்தர்களின் பாவங்களைப் போக்க வேண்டும். வேண்டும் வரங்களை வழங்குகின்றீர். ஆதலால்தான் ஸ்வாமி இந்தப் புது வருடத்தில் லக்ஷக்கணக்கான பக்தர்கள் தங்களின் திவ்ய மங்கல சௌந்தர்யத்தைத் தரிசிக்க திருமலைக்கு வருகின்றனர். தங்களுக்கு உத்ஸவங்களையும், திருவீதி வலங்களையும் சிறப்பாக நடத்துகின்றனர். நவக்கிரக தோஷங்களில் இருந்தும் காப்பாற்றுகின்றீர். தங்களின் இன் அருளால் பக்தர்கள் அனைவரும் மகிழ்வுடன் உள்ளனர் என்று ஆஸ்தான சித்தாந்தி புதிய பஞ்சாங்கத்தை வாசிக்க, ஸ்வாமியும் சர்வபூபால வாகனத்தில் கொலுவீற்றிருந்து பஞ்சாங்கத்தைக் கேட்டபடியே இன்னருளும் புரிகின்றார்.

அதன்பின்னர் ஆஸ்தான சித்தாந்தி ஸ்ரீதேவி பூதேவியரின் நட்சத்திரங்களான உத்திரம், ரேவதி நட்சத்திரங்களையும் கூறுவார். பின்னர் அங்கு விற்றிருக்கும் செயலாட்சித் தலைவர், இணைச் செயலாட்சித் தலைவர், பொறுப்பாண்மைக் குழுவினர், ஆலய அதிகாரிகளின் நட்சத்திர பலன்களையும் கூறுவார்.

பஞ்சாங்கம் வாசித்த ஆஸ்தான சிந்தாந்திக்கு ஸ்வாமியின் திருப்பாதங்கள் மீது இருக்கும் அக்ஷதையைத் தூவி சடாரியால் மரியாதையைச் செய்வர். பின்னர் ஸ்வாமியின் கணக்காளர் ஸ்வாமியைப் பயபக்தியுடன் வணங்கி முந்தைய நாளின் உண்டியல் வருவாய், வரவு செலவு, உத்ஸவங்கள், தேவஸ்தான இதர ஆலய உத்ஸவங்களையும் கூறுவார். உடனே "கொலவு பல்லெம்" எனும் தங்கத் தட்டில் ஸ்வாமிக்கு நவநீத ஹாரத்தியும், தாள்ளபாக்கம், தரிகொண்டா, மகந்த், மைசூர் ஹாரத்திகளும் சமர்ப்பிக்கப்படும். அங்கு இருக்கும் பக்தர்களிடமிருந்து ஒவ்வொரு ரூபாயாகச் சேகரித்து "ரூபாய் ஹாரதி" சமர்ப்பிப்பர். இவ்வாறாக சேகரிக்கப்பட்ட ரூபாயைச் செயலாட்சித்தலைவர் அவர்கள் ஸ்வாமியின் கஜானாவில் சேர்ப்பார்.

இறுதியாக ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகளுக்கும், தேவஸ்தான செயலாட்சித் தலைவருக்கும் பரிவட்டம் கட்டி சடாரி மரியாதைச் செய்து ஸ்வாமி பிரசாதங்களையும், அக்ஷதை தாம்பூலமும் வழங்கிடுவர். இவ்விதமாக திருவேங்கடமுடையானின் உகாதி ஆஸ்தானம் மிகச் சிறப்பாக நிறைவடையும்.

உகாதியன்று பஞ்சாங்கம் வாசித்தால் சத்ரு பயம் நீங்கி, துஷ்டகனவுகள் விலகிடும். கங்கா ஸ்நான பலன், கோதானபலன் கிட்டிடும். அதோடு ஆயுள் பெருகிடும். சத்சந்தானம் கிட்டிடும்.

திருமலை ஆலயத்தில் உகாதியன்று காலையில் தங்க வாயில் முன்பாக ஏகாந்தமாக நடைபெறுகின்ற "திருவேங்கடமுடையானின் உகாதி ஆஸ்தானம்" நிகழ்வினை நினைத்தாலே ஆனந்தம் கிட்டிடும். அனைவரின் இல்லமும் ஆனந்த நிலையம் ஆகிடும். அனைவரின் இல்லத்தின் வாயிலும் தங்க வாயிலே, மணிமண்டபங்களே, அனைவரின் இதயமும் சர்வபூபால வாகனமே! உங்களின் இதயங்களின் அந்த இல்லத்தில், உங்கள் உள்ளத்தில் புது பஞ்சாங்கத்தை வாசியுங்கள். அந்த ஸ்ரீநிவாசன் கருணையால் இந்த உகாதியான தெலுங்கு புது வருடத்தில் அனைத்து வளங்களையும் பெற்றிடுங்கள்.

**– திரு.ஜெ.பாலசுப்ரமணியம், திருப்பதி.**



திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில்

# பெண்களுக்கே முதலிடம்

– திரு.அத்தி ரங்கராஜன், திருப்பதி,
98490 99246

சனாதன தர்மம் என்றுமே மகளிருக்கு முன்னுரிமை வழங்கி உள்ளது. நமது முன்னோர்கள் பெண்மையைப் போற்றிய விதத்தை அறிய நம் புராணங்களையும், இதிகாசங்களையும் ஒருமுறை புரட்டிப் பார்ப்போம். ஒரு தாயாக, மகளாக, சகோதரியாக, ஆலோசகராக, அவ்வளவு ஏன் கடவுளாகக் கூட ஒரு பெண்ணை மதித்தது நமது சனாதன தர்மம் மட்டுமே.

திருமலையில் பெண் போற்றப்பட்ட விதம் அறிந்தால் வியந்து போவோம். அதற்கு பற்பல சான்றுகள் உள்ளன. உதாரணத்திற்கு ஸ்ரீவேங்கடேஸ்வர சுப்ரபாதத்தை எடுத்துக் கொள்வோம். திருவேங்கடவனைத் துயிலெழுப்பப் பாடும் பாடல் இது.

*கௌசல்யா சுப்ரஜா ராமா பூர்வா சந்த்யா
ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நர சார்தூலா கர்தவ்யம்
தெய்வமாஹ்னிகம்*

29 சுலோகங்கள் கொண்ட இந்த சுப்ரபாதத்தில் இது தான் முதல் வரி. இதில் இராமன், “கௌசல்யா புதல்வன்” என்று தான் அழைக்கப்படுகிறார். ஒழுக்க சீலனான பகவான் ஸ்ரீராமனுக்கு எத்தனையோ மேதகு கல்யாண குணங்கள் உள்ளபோதிலும், அவர் ஒரு தாய் சார்ந்த மகனாகத்தான் இங்கு போற்றப்படுகிறார். அதுதான் நமது தர்மத்தில் தாய்மைக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம்.

அதே போல், ஸ்ரீவேங்கடேஸ்வர பிரபத்தி எனும் வேங்கடவனுக்கு சரணாகதி அடையக் கோரிச் சொல்லும் 16 சுலோகங்களில் முதல் சுலோகமே பெண்மையைக் கௌரவப்படுத்தும் விதமாக உள்ளது.

*ஈசாநாம் ஜகதோ(அ)ஸ்ய வேங்கடபதேர்
விஷ்ணோ: பராம் ப்ரேயஸீம்
தத்வக்ஷஸ் ஸ்தல நித்ய வாஸ ரஸிகாம்
தத்க்ஷாந்தி ஸம்வர்த்திநீம்
பத்மாலங்க்ருத பாணிபல்லவ யுகாம்
பத்மாஸநஸ்தாம் ச்ரியம்
வாத்ஸல்யாதிகுணோஜ்ஜ்வலாம் பகவதீம்
வந்தே ஜகந்மாதரம்*

கடவுளை சரணாகதி அடைய அவன் புகழ் பாடாமல், முதல் வரியிலேயே தாயார் புகழ் பாடப்படுகிறது. பிறகுதான் திருவேங்கடவன் புகழ் கீர்த்திக்கப்படுகிறது. இதற்கு விளக்கம் என்னவென்றால், ஒரு குழந்தை தனது தந்தையிடம் ஒரு கோரிக்கை வைக்கும்முன் தனது தாயை அணுகி சிபாரிசு கோருவதுபோல் ஒரு பக்தனும் அப்பன் வேங்கடத்தவனின் பாதம் பற்ற தாயார் மஹாலக்ஷ்மி மூலமாக அணுகுகிறார் என்று பொருள். இது இந்த “பிரபத்தி” எனும் சரணாகதி உரையின் கடைசியில் பதினாறாம் சுலோகத்தில் தெளிவாக அறிவிக்கப்படுகிறது. மகளிருக்கு முதலிடம் என்பது நமது சனாதன தர்மத்தின் சின்னங்களான புராணங்களில் மட்டும்









அல்லாமல், திருமலை கோயிலின் வரலாற்று பக்கங்களிலும் பார்க்கலாம். திருமலை கோயில் கல்வெட்டுக்களில் பதிக்கப்பட்டிருக்கும் வரலாற்று சிறப்புமிக்க ஒரு நிகழ்வு ஒரு பெண்ணுடன்தான் ஆரம்பிக்கப்படுகிறது.

திருமலை எனும் கோயிலைப் பற்றிய முதல் வரலாற்று பதிவு கிடைத்த வருடம் தொடர் ஆண்டு 966ஆம் வருடம் பல்லவ ராணி சாமவாயி திருமலைக்கு விஜயம் செய்த நாள் தான் இந்தக் கோயிலுக்கு சம்பந்தமான முதல் கல்வெட்டு. அன்று இவர் வெள்ளியால் ஆன போக ஸ்ரீநிவாச மூர்த்தியைக் கோயிலுக்கு வழங்கினார். அந்தச் சிலை இன்றும் ஸ்வாமியின் கருவறையில் பூஜிக்கப்படுகிறது.

பன்முகத்திறமைக்கு பேர் போனவர்கள் பெண்கள். பல வேலைகளைத் திறம்படச் செய்து அசத்துவதில் மகளிர்க்கு நிகரில்லை. தவழும் வயதில் இருக்கும் பல குழந்தைகளை ஒரு தாய் எப்படி சிறப்பாகப் பார்த்துக் கொள்கிறாளோ, ஒரு மனையாள் எப்படி தனது வீட்டு வேலைகளை செம்மனே செய்து முடிக்கிறாளோ, வேலைக்குச் செல்லும் பெண் எப்படி தனது அலுவலகத்தில் பணிகளை நிறைவேற்றி மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவதை கண்கூடாகக் காண்கிறோம். பெருமாளே தேவியர்க்கு தனது திருமார்பினில் தகுந்த இடம் அளித்ததுபோல், சனாதன தர்மத்தின் வழியில் வந்த நமது சமுதாயமும் பெண்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் இது.

எம்பெருமானின் செயலைப் பின்பற்றி திருமலை திருப்பதி தேவஸ்தானமும் மகளிருக்கு முக்கியமான பாத்திரங்கள் அளித்திருக்கிறது. ஊழியராகட்டும், பக்தராகட்டும், தன்னார்வத் தொண்டர்களாகட்டும், மகளிருக்கு என்றும் சிறப்பிடமே.

### ஊழியர்கள்

திருப்பதி தேவஸ்தானத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான ஊழியர்களில் பெண்களுக்கு சிறப்பான பங்குண்டு. மேல் அதிகாரியிலிருந்து கடைநிலை ஊழியர் வரை இங்கு பெண்கள் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர்.

இங்கு இணைச் செயலாட்சித் தலைவர் என்ற உயர் பொறுப்பில் பெண் அதிகாரிகளும் பணியாற்றி வருகின்றனர். அதேபோன்று தேவஸ்தானத்தின் கீழ் செயல்படும் பல கோயில்களை துணைச் செயலாட்சித் தலைவர்களாக இருந்து நிர்வகித்து வருகின்றனர். செயல் அலுவலரின் ஆலோசனைப் பெற்று அறங்காவலர் குழுவின் ஆணைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதில் இவர்களுக்குத்தான் முதலிடம். பணிபுரியும் இடத்தில் திறமையை வெளிப்படுத்துவதில் பாலினம் என்றுமே ஒரு தடை இல்லை. இது நமது திருப்பதி தேவஸ்தானத்தில் முற்றிலுமாக நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. இன்றும் கூட தி. தி. தேவஸ்தானத்தின் மக்கள் தொடர்பு அலுவலராகச் செயலாற்றி வருபவர் ஒரு பெண் தான் என்பது குறிப்பிடத்தக்கது. தி.தி.தேவஸ்தானத்தில் தங்கத்திருத்தேர் இழுப்பது என்பது மகளிருக்கு மட்டுமே உரியதாக விளங்குவது ஒரு தனிச்சிறப்பு.

திருமலை என்றாலே நினைவுக்கு வருவது தலைமுடியைக் காணிக்கையாக வழங்கும் வேண்டுதல் ஆகும். அழகுக்கும், அகந்தைக்கும் அடையாளமான தலை முடியை அந்த திருமலையப்பனின் காலடியில் சமர்ப்பிப்பதன் மூலம் ஒரு பக்தன் தனது பக்தியையும், பணிவையும் தெரிவிக்கிறான். காலங்காலமாக ஆண்கள் மட்டுமே செய்து வந்த முடித்திருத்தும் தொழிலில் பெண்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

மகளிருக்கு முடிதிருத்தும் தொழிலில் சம உரிமை வழங்கிய இந்துக் கோயில்களில் திருப்பதி தேவஸ்தானத்திற்கே முதலிடம். திருமலையில் முடிக்காணிக்கை செலுத்தப்படும் "ஸ்ரீகல்யாணக் கட்டா" (முடித்திருத்தும் நிலையம்) என்ற இடத்தில் நாம் இந்த புரட்சிகர நிகழ்வைக் காணலாம். தற்போது திருமலையில் பக்தர்களுக்கு தலைமுடி இறக்கும் தொழிலாளிகளில் இருநூற்றுக்கும் மேற்பட்டோர் பெண்களே.



உடல் வலிமைக்கும், தசை சக்திக்கும் தான் முன்னுரிமை என்ற காலத்தில் இருந்தது போல் அல்லாமல், அறிவுபூர்வச் சிந்தனையும், நினைவாற்றலும் கூட முக்கியம் என்று உணரப்படும் இந்தக் காலத்தில் பெண்களும் பாதுகாப்புப் பணியில் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். துணை கண்காணிப்பு அதிகாரி பொறுப்பில் இருந்து காவலாளி வரை இன்று பல நூற்றுக்கணக்கான பெண்கள் இங்கு பணி புரிகின்றனர். இவர்கள் திருமலையப்பனின் கோடிக்கணக்கான சொத்துக்கு மட்டுமல்லாமல், பக்தர்களுக்கும் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.



ஒரு நாளைக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வரும் நிலையில் திருமலையின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒரு சவால் என்றே சொல்லலாம். திருமலை என்ற மலை நகரம் என்றும் பளிச்சென்று காட்சி அளிப்பதாக உலகெங்கும் உள்ள பக்தர்கள் கூறுகின்றனர் என்றால் அப்புகழ் இங்கு வேலை செய்யும் துப்புரவுத் தொழிலாளர்களையே சேரும். கோயில் மட்டும் அல்லாமல் பக்தர்களுக்கு அளிக்கப்படும் அறைகள் முதற்கொண்டு விருந்தினர் மாளிகையும் ஒரே அளவில் சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறது என்றால் இந்த பெண் தொழிலாளர்களின் கைவண்ணம் தான். தேவஸ்தானத்தினர் தங்களின் ஊதுவத்தி, சோப்பு மற்றும் உலர்ந்த மலர் இதழ்களால் செய்யப்படும் படங்கள் தயாரித்தல் போன்ற இடங்களிலும் அதிகளவில் பெண் தொழிலாளிகளையே வேலைக்கு அமர்த்தி இருக்கிறார்கள்.




**கல்வி**

பெண்ணுரிமையைக் காப்பது பெண்ணுக்கு கல்வியை அறிமுகப்படுத்துவதன் மூலம் தான் சாத்தியப்படும் என்று எண்ணி, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு புரட்சிகர முடிவு எடுத்துள்ளனர்.

ஸ்ரீபத்மாவதித் தாயார் பெயரில் திருப்பதியில் ஒரு இள நிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்புக்கான கலைக்கல்லூரி, ஒரு மேநிலைப்பள்ளி மற்றும் ஒரு தொழிற்கல்லூரி நிறுவி பின் தங்கிய ஏழை எளிய மாணவியரின் வாழ்க்கைக்கு ஒளி ஊட்டினர்.




மேல்படிப்பு என்றாலே சென்னை அல்லது பெங்களூர் தான் செல்ல வேண்டும் என்ற கால கட்டத்தில் நிறுவப்பட்ட இந்த கல்லூரிகள் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. பெண் குழந்தைகளை வெளியூருக்கு அனுப்பி இரு முறை யோசிக்கும் கிராமப்புற பெற்றோருக்கு அருகிலிருக்கும் திருப்பதிக்கு அனுப்ப எந்த தயக்கமும் இருந்ததில்லை. இதனாலேயே இப்பகுதியைச் சேர்ந்த பல பெண்களின் வாழ்க்கை தரம் மேம் பட்டது. இதன் பின்தான் திருப்பதிக்கு பல பல்கலைக் கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் வந்து, இன்று திருப்பதி ஒரு கல்வி நகரமாகத் திகழ்கிறது. தேவஸ்தானத்தின் கல்லூரிகளில் படித்த ஆயிரக்கணக்கான பெண்கள் உலகத்தின் பல்வேறு நாடுகளில் பணிபுரிந்து, பல பேர் ஓய்வும் பெற்று உள்ளனர். வியாபாரம், அரசியல் போன்ற துறைகளிலும் பல பெண்கள் வெற்றிக் கொடியை நாட்டினார் கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இதற்கெல்லாம் திருப்பதி தேவஸ்தானத்தினரின் தொலைநோக்குப் பார்வை தான் காரணம்.

### மருத்துவம்

ஸ்ரீவேங்கடேஸ்வரா மருத்துவ பல்கலைக் கழகத்தின் கீழே மகளிருக்கான "ஸ்ரீபத்மாவதி மகளிர் மருத்துவக் கல்லூரி" மூலமாக பின் தங்கிய ஏழை எளிய மாணவியரின் மருத்துவக்கனவும் நிறைவேறுகிறது. அதேபோல், ஏழை மக்களுக்கு குறைந்த கட்டணத்துடன் கூடிய சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் அந்தத்தாயாரின் பெயரிலேயே "ஸ்ரீபத்மாவதி இருதயாலயா" என்ற குழந்தைகள் இதய மருத்துவ நிலையமும் நடத்தப்படுகிறது. பிறப்பிலேயே இதய நோயுடன் பிறக்கும் குழந்தைகளுக்கான மிகவும் விலையுயர்ந்த நேர்த்தி மிக்க அறுவை சிகிச்சைகள் இங்கு இலவசமாக அளிக்கப்படுகிறது.

நாடெங்கிலும் மட்டும் அல்லாமல் வெளி நாட்டிலிருந்தும் இதுவரை 3500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இங்கு இலவசமாக அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. மரணத்தின் பிடியில் சிக்கிய குழந்தைகளுக்கு புத்துயிர் அளித்திருக்கிறது இந்த பத்மாவதி இருதயாலயா மருத்துவமனை. இங்கு ஆந்திர மாநிலத்தின் ஆரோக்கியஸ்ரீ திட்டம் மற்றும் மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலமும் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தியாவின் முதல் பத்து சிறப்பான மருத்துவ மனைகளில் இது ஒன்றாகத் திகழ்கிறது.

குழந்தையின் நலனுக்காக ஒரு தாயுள்ளம் எப்படி பதைபதைக்குமோ அதே போல் இந்த திருப்பதி தேவஸ்தானம் குழந்தைகளின் இருதய நோய் தீர்க்கப்பாடுபடுகிறது.



### சேவை

பக்தர்களுக்கு இலவசமாக சேவை புரிவதிலும் மகளிர்க்கு நிகரில்லை. "ஸ்ரீவாரி சேவகர்கள்" என்றழைக்கப்படும் இந்தத் தன்னார்வத் தொண்டர்கள் தேவஸ்தானத்தினரால் தேர்வு செய்யப்பட்டு திருமலையில் தேவையான இடங்களில் தொண்டு புரிய அனுப்பப்படுவார்கள். இவர்கள் ஒரு வாரம் இங்கேயே தங்கி க்யூ வரிசைகளில் பக்தர்களை கண்காணிப்பதும், சமையலறையில் காய்கறிகளை நறுக்குவதும், அன்னப்பிரசாதம் வழங்கப்படும் இடங்களில் உணவு பரிமாறுவதும், பூமாலை தொடுப்பதும் போன்ற சேவைகளைச் செய்கின்றனர். இதில் ஆர்வம் காட்டும் ஸ்ரீவாரி சேவகர்களில் பெரும்பாலானோர் மகளிரே ஆவர். அயல் நாட்டினைச் சேர்ந்த மகளீரும் தற்போது இச்சேவையில் பங்கு கொள்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

பெண்கள் நினைத்தால் நிறைவேற்ற முடியாத காரியம் எதுவுமே இல்லை என்று திருமலையில் பணி புரியும் பெண் ஊழியர்கள், அதிகாரிகள், தன்னார்வத் தொண்டர்கள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றனர்.





# திருவல்லிக்கேணி

- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பிரம்மாண்ட பிருந்தாரண்ய க்ஷேத்ர மாகாத்மியம் என்றும் சொல்வர். பிருந்தாரண்யம் என்பதற்குத் துளசிக்காடு என்று பொருள். பிருகு, அத்ரி, மரீசி, மார்க்கண்டேயர், சுமதி, ஸப்தரோமர், ஜாபாலி என்னும் ஏழு ரிஷிகள் தவம் செய்தனர். பாற்கடலில் பகவானுக்கும், பிராட்டிக்கும் ஏதோ ஒரு காரணத்தால் பிணக்கு ஏற்பட, பிராட்டி பெருமானைப் பிரிந்து, இத்திவ்ய தேசத்தில், சந்தன மரத்தின் அடியில், மிக அழகிய ஒரு பெண் குழந்தையாக வர, அக்குழந்தையை பிருகு முனிவர் வியந்து தமது மனைவியிடத்தில் கொடுத்து வளர்க்க, தேவியும் வேதவல்லி என்ற பெயரில் அங்கே வாழ்கின்ற மாமுனிவர்கள், அவர் தம் தேவியர்கள் ஆகிய எல்லோருடைய பேரன்பிற்கும் பாத்திரமாகி முனிவர்கட்குக் கைங்கர்யம் செய்யும் பேறு பெற்று, அச்சமயம் பிராட்டியை எம்பெருமான் இப்பகுதியில் பிருகு முனிவர்க்கு தன் உண்மைக்காட்சியை வழங்கி, மலர் பறிக்கும் நிலையில் இருந்த வேதவல்லியையும் கண்டு, வேதவல்லியை மணந்து இங்கு நித்ய வாசம் செய்கிறார்.

இப்புராணத்திலேயே பகவான் தெள்ளிய சிங்கராக, அர்ச்சையில் அவதரித்த வரலாறு உள்ளது. முக்தியை வேண்டி இவ்விடத்தில் கடுந்தவம் செய்து கொண்டிருந்த அத்ரி மாமுனிவரின் தவச்சாலைக்கு விகடர் என்ற மாமுனிவர் வந்தார் என்றும், அவர் வாயிலாக பகவான் அத்ரி முனிவருக்கு, சேவை சாதிக்க எண்ணியபோது வானரர்கள் புடைசூழ, ஆதிசேடன், கருடன், சேனை முதலியார், ஸநகாதி யோகியர் முதலியோர் தன்னைச் சூழ்ந்து பணி செய்யவும், மிகச் சிறந்த விமானத்தில், நரசிங்க வடிவில், எம்பெருமான் அத்ரி முனிவர்க்குக் காட்சி வழங்கினார் என்றும் உள்ளது. அதனால் இந்தத் திவ்ய தேசத்தில் தெள்ளிய சிங்கமாய் சேவை சாதிக்கிறார்.

பிருந்தாரண்யம் என்ற திருவல்லிக்கேணியில், இராமன், சீதையோடும், இலக்குவ, பரத,



சத்ருக்னரோடும், அனுமனோடும் அர்ச்சையில் விளங்குவதற்கான தல வரலாறு பிரம்மாண்ட புராணம் ஏழாம் அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ளது.

பாண்டிய நாட்டுப் பாண்டர மலையில் சசபதர் என்ற மாமுனிவர், தவம் செய்தபோது, இந்திரன், ஹேலை என்ற பேரழகியை அனுப்பி, அவளுடைய இன்னிசையால், மாமுனிவரின் உள்ளத்தைக் கவர மாமுனிவர் தவத்தைக் கைவிட்டு, ஹேலையுடன் உலக வாழ்வில் ஈடுபட, அதனால் தேன் துளிகளையே உண்டு வாழும் மதுமான் என்ற ஆண் குழந்தை பிறக்கிறது. பெற்றவர்கள் புறக்கணித்தாலும், தவச்சாலை முனிவர்களின் பேரன்பினால், கல்வியும் பண்பும் வாய்க்கப் பெற்றவனாக கார்க்கியர் என்ற ரிஷி மூலமாக இராம கதையை அறிந்து, அந்த இராமனைக் கண்ணாரக் கண்டு வழிபட வேண்டும் என்ற ஆசையுடன் தவம் செய்ய பகவான் மதுமானின் கனவில், கார்க்கிய முனிவரின் வடிவில் தோன்றி, "பிருந்தாரண்யம் என்ற திருவல்லிக்கேணிக்கு வந்து வழிபட்டால் உன் விருப்பம் நிறைவேறும்" என்று அருள, மதுமான் இங்கு வந்து இராமனைத் தரிசித்தார்.

**யுகாதி பச்சடி :**



யுகாதி பச்சடிக்கு யுகாதி கொஜ்ஜு, யுகாதி ரசாயனம் என்ற பெயர்கள் கூட உள்ளன. யுகாதி அன்று அப்யங்க ஸ்நானத்திற்கு பிறகு யுகாதி பச்சடி செய்து இறைவனுக்கு நைவேத்தியம் செய்து வெறும் வயிற்றில் இந்த பச்சடியை உண்பர். இதனால் புதிய வருடத்தில் தம் வருங்காலம் ஆனந்தமாக இருக்கும் என்று நினைக்கின்றனர்.

யுகாதிப் பச்சடி அறு சுவைகளுடன் கூடியது. அவை, 1) இனிப்பு, 2) புளிப்பு, 3) உவர்ப்பு, 4) கசப்பு, 5) உப்பு, 6) காரம். இத்தனை ருசிகளுடன் கலந்த பச்சடி வரவேற்கத்தக்கதாக உள்ளது. இதில் இனிப்பிற்கு சிலர் புதிய வெல்லத்தை (சிலர் சர்க்கரை) உபயோகிக்கின்றனர். இதில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனி ருசி. ஒவ்வொரு சுவைக்கும் ஒரு பொருள் உண்டு. இனிப்பு – சுகத் திற்கும், கசப்பு – வாழ்க்கையில் துக்கத்திற் கும், மற்ற ருசிகள் கஷ்ட நஷ்டங்களுக்கும், ஆனந்தங்களுக்கும் எடுத்துக்காட்டு. வாழ்க்கையில் இவையெல்லாம் சாதாரணமானவை. இவற்றை சாமார்த்தியமாக எடுத்துச் சமாளிக்க வேண்டும் என்று இந்த யுகாதி பச்சடியை நாம் உட் கொள்வ தன் மூலம் நினைவு கொள்ள வேண்டும் என்பது ஒரு ஐதீகம்.

**பிரம்மாண்ட புராணம் மேலும் கூறுகிறது:**

சப்த ரோமா என்னும் ரிஷி ஆனைக்கு அருள் புரிந்த எம்பெருமானின் வரலாற்றில் அதிக ஈடுபாடு கொண்டு, கஜேந்திரனைக் காக்க கருடன்மேல் அமர்ந்து வந்த எழில் வடிவத்தை வைத்து வழிபட்டு வரவும், அவரது காலத்திற்கு பின்பு, அதே வடிவில் எம்பெருமான், அத்திருக்கோயிலில் சேவை சாதிக்கிறார்.

திருமலை வேங்கடவனே திருவல்லிக்கேணியில் வேங்கட கிருஷ்ணன் என்ற திருநாமத்துடன் அர்ச்சையில் மூலவராகக் காட்சி வழங்குவதையும் பிரம்மாண்ட புராணம் கூறுகிறது. வியாசரின் சீடரான ஆத்ரேயருக்கு, "கண்ணனும் ஸ்ரீவைகுண்டம் சென்றுவிட்டதால், கலியுகத்தின் தீமைகளில் இருந்து யார் காக்கப் போகிறார்கள்" என்று கவலை ஏற்பட்டது. அதனை அறிந்த வியாசர், எம்பெருமானின் தூண்டுதலால், தற்போது விளங்கும் மூலவரின் வடிவில், திருமலை வேங்கடவனையே உள்ளுறை பகவானாகக் கொண்டு பிருந்தாரண்யம் என்ற திருவல்லிக்கேணியில், கைரவிணீ தீர்த்தக்கரையில் ஆத்ரேயரைக் கொண்டு நிலைநாட்டி, வைகானஸ ஆகமம் கொண்டு வழிபடச் செய்தார் என்றும், வேங்கடவனே கிருஷ்ணனாக அர்ச்சையில் அவதரித்து உள்ளமையால், வேங்கடகிருஷ்ணன் என்ற திருப்பெயரும் எம்பெருமானுக்கு ஏற்பட்டது என்றும், தற்போது உள்ள மூலவரின் திருவுருவம், கண்ணனோடு சமகாலத்தில் வாழ்ந்த வியாஸரால் உருவாக்கப் பெற்றது என்றும் தல புராணம் சொல்கிறது.

"எல்லாம் வேங்கடவனின் இன்னருளே" என்று சுமதி என்கிற மன்னன் வழிபட்டு வரும்போது, வேங்கடவனைத் தேர்ப்பாகன் வடிவில் கண்ண

னாகக் கண்டு மகிழ வேண்டும் என்று பெருவிருப்பம் கொள்கிறான். உடனே பகவான் அவனைப் பிருந்தாரண்யத்திற்கு வரச்செய்து, ஆத்ரேயரிடம் உள்ள தன் பிம்பத்தைக் காட்டுகிறான். அவ்வடிவில் வலக்கையில் பாஞ்சசன்யம் விளங்க, இடக்கை வரத ஹஸ்தமாகத் திகழக் காட்சி கொடுத்தான் என்பர்.

இப்படி பஞ்சமூர்த்தித் தலமாகத் திருவல்லிக் கேணி விளங்குவதைத் தல வரலாற்றில் காண்கி றோம். இத்திவ்ய தேசத்தில், கங்கையைக் காட்டிலும் புனிதம் மிகுந்த கைரவிணீ என்ற திருக்குளம், நீராடுபவர்க்கு நலம் பொழியும் அமுதத் தீர்த்தம்.

## சிறப்புகள்

பக்தர்களுக்கு இங்கு பகவான் தன் தெய்வீகக் குடும்பத்துடன் சேவை சாதிக்கிறான்.

1) வேங்கட கிருஷ்ணன், 2) ஸ்ரீரங்கநாதன், 3) இராமன், 4) வரதன், 5) தெள்ளிய சிங்கர் ஆகிய ஐந்து எம்பெருமான்கள்.

| | |
|---|---|
| பெருமாள் | : மூலவர் : வேங்கடகிருஷ்ணன் (கிழக்கு நோக்கிய நின்ற திருக் கோலம்). |
| உத்ஸவர் | : பார்த்தசாரதி. (ருக்மிணி, பல ராமன், சாத்யகி, அநிருத்தர், பிரத்யும்னர் முதலியோரை மூல ஸ்தானத்தில் உடன் சேவிக்க லாம். கிழக்கு நோக்கி கிடந்த திருக்கோலம். தனிக் கோயில் நாச்சியார் இல்லை) |
| பெருமாள் | : ஸ்ரீரங்கநாதர் மன்நாதன், என்னை ஆளுடைய அப்பன். |
| தாயார் | : வேதவல்லித்தாயார், சக்ர வர்த்தித் திருமகன். சீதை, லக்ஷ்மணன், பரதன், சத்ருக் னன், அனுமன் (தெற்கு நோக் கிய நின்ற திருக்கோலம்) |
| பிரத்யக்ஷம் | : மதுமான் |
| பெருமாள் | : வரதராஜப் பெருமாள் (கருடன் மீது கிழக்கு நோக்கி அமர்ந் துள்ள தேவப் பெருமாள்) |
| பிரத்யக்ஷம் | : ஸப்தரோமர். |
| பெருமாள் | : தெள்ளியச்சிங்கர் (நரசிம்மர்) (மேற்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம்) |



| | |
|---|---|
| பிரத்யக்ஷம் | : அத்ரி, ஜாபாலி. |
| விமானம் | : ஆனந்த விமானம், பிரணவ விமானம், புஷ்பக விமானம், சேஷ விமானம், தெய்வீக விமா னம். |
| 4ம் 6ம்தீர்த்தம் | : கைரவிணி ஸரஸ், (அல்லிக் கேணி) இந்திர தீர்த்தம், சோம தீர்த்தம், மீன தீர்த்தம், அக்னி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் முத லிய ஐந்து தீர்த்தங்களால் சூழப் பெற்று உள்ளதாகக் கூறப் பெறுகிறது. |
| பிரத்யக்ஷம் | : சுமதி, ராஜாதொண்டைமான், அர்ச்சுனன், ருக்மிணித்தாயார், மதுமான், ஸப்தரோமர், அத்ரி மாமுனிவர், ஜாபாலி மாமுனி வர், பிருகு மாமுனிவர், மார்க் கண்டேயர் என்ற மாமுனிவர். |
| ஆகமம் | : வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : பேயாழ்வார், திருமழிசை ஆழ் வார், திருமங்கை ஆழ்வார். |

## விசேஷம்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம், ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி என்கிற பரமாசாரிய சுவாமிகள் "கிருஷ்ண னுக்கு எனப் பல ஆலயங்கள் இருந்தாலும் தேரோட் டியாக பார்த்தனுக்குச் சாரதியாக பார்த்தசாரதி கோலத்துக்கு என்று இருப்பது இக்கோயில் ஒன்று தான்" என்று தமது அருளுரையில் கூறியுள்ளார்.

அர்ஜுனன் மீது பகைவர்கள் விடுத்த அம்பு களை எல்லாம், தான் ஏற்று, தன்னுடைய திருமுக மண்டலம் முழுவதும் குருதிப் பெருக்கோடு கூடிய

விழுப்புண்களை ஏற்று எளிமையின் எல்லையை, இத்தலத்து உத்ஸவ மூர்த்தியின் திருமுகத்தில் இன்றும் காணலாம். வலத்திருக்கரத்தில் ஞானப்பிழம்பாகிய சங்கினையும் கொண்டு இடத் திருக்கரம் வரம் ஹஸ்தமாகவும் விளங்குவது இங்கேதான்.

**திவ்ய தேச வாழ்த்துப் பாசுரம் :**

*பொரு வில்லிக்காக மைந்தன் தனைத் தந்த புண்டரீகத்து*
*ஒரு வல்லிக்கு ஆகம் ஈந்தோய்! ஓலம் என்று அழைத்த தொல்லை*
*வெருவல்லிக் கரவால், அன்று வெந்திறல் திகிரிவிட்டே*
*திருவல்லிக்கேணி மேவு தேவநாயகன் தாள் வாழி!*

**த்யானச்லோகம் :**

*க்யாதே கைரவிணீ ஸரச்ச்ருதபுரே சேஷே விமாநே சுபே*
*பூர்வாம்போதி ஸமீக்ஷணச்ச ஸததம் ஸ்ரீவேதவல்ல்யாந் வித:*
*ஸம்ஸாரம் புதி தாரிணம் ப்ரண மதாம்கீதார்த்தயந்தாயினம்*
*பார்த்தாயை வச பார்த்த ஸாரதி மஹம் த்யாயாமி நிச்ரேயஸே*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

பாசுரம்

*வந்து உதைத்த வெண்திரைகள், செம்பவளம் வெண்முத்தம்*
*அந்தி விளக்கு மணி விளக்காம் - எந்தை*
*ஒரு அல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்வன்*
*திருவல்லிக்கேணியான் சென்று*

– பேயாழ்வார்

*தாளால் உலகம் அளந்த அசைவே கொல்?*
*வாளா கிடந்து அருளும் வாய்திறவான் - நீள் ஓதம்*
*வந்து அலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்*
*ஐந்தலை வாய் நாகத்து அணை*

– திருமழிசையாழ்வார்

*வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை விழுமிய முனிவர்கள் விழுங்கும்*
*கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக் குவலயத் தோர்தொழு தேத்தும்*
*ஆதியை அமுதையென்னை யாளுடை அப்பனை ஒப்பவரில்லா*
*மாதர்கள் வாழும் மாடமா மயிலைத் திருவல்லிக் கேணிக்கண் டேனே.*

– திருமங்கையாழ்வார்

*திரிந்து உழலும் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்*
*புரிந்து புகல்மின் புகன்றால் - மருந்து ஆம்*
*கருவல்லிக்கு ஏணியாம் மாக்கத்திக்கு கண்ணன்*
*திருவல்லிக்கேணியான் சீர்*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*871. ஓம் ஸத்வவாந் நம:*

சுத்த ஸத்வகுணஸ்வரூபி.

*ஓம் ஸ்பூர்த்தி: நம:*

தியானிப்பவர் இதயத்தில் சிரமம் தராமல் தோன்றுபவள்.

*872. ஓம் ஸாத்த்விக: நம:*

ஸத்வ குணத்தின் பலனை அளிப்பவன்.

*ஓம் வ்யாக்யா: நம:*

பற்பல திருநாமங்களை உடையவள்.

*873. ஓம் ஸத்ய: நம:*

ஸத்ய ஸந்தன்.

*ஓம் ஸுத்ரா: நம:*

கோர்க்கப்பட்ட மணிகளைத் தாங்கும் நூலைப் போல உலகுக்கு ஆதாரமாக இருப்பவள்.

*874. ஓம் ஸத்ய தர்ம பராயணா: நம:*

நல்லோர்கள் செய்யும் தர்மங்களை ஏற்பவன்.

*ஓம் ப்ரஜாவதீ: நம:*

அனைவரையும் தன் குழந்தைகளாக உடையவள்.


விரைவில் விற்பனைக்கு

தி.தி.தே. தமிழ் பஞ்சாங்கம்

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வருடந்தோறும் பஞ்சாங்கம் வெளியிடப்படுகிறது. ஸ்ரீவிசுவாவசு வருட (2025-2026) பஞ்சாங்கம் விரை வில் விற்பனைக்கு வரவுள்ளது. இந்த பஞ்சாங்கத் தில் தினசரி திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம், ஹோரைகள் போன்ற விஷயங்களுடன், பொதுவான பஞ்சாங்கம் சார்ந்த விஷயங்கள், முகூர்த்த நாட்கள், திருமலை ஆலயம் மற்றும் அதைச் சார்ந்த தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் குறித்த பட்டியல்கள் போன்ற அரிய விஷயங்களுடன் விரைவில் உங்கள் முன்...

**மேலும் விவரங்களுக்கு : சிறப்பு அலுவலர்,**
**தி.தி.தே. பதிப்பகம் மற்றும் விற்பனையகம்,**
**தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி.சாலை,**
**திருப்பதி-517 501. தொ.எண்.0877-2264209**



# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*க்ஷணேந தஸ்யாங்கு$_3$லயச்ச திஸ்ர:*
*புரேவ பூ$_4$தாஸ்தது$_3$தீ$_3$க்ஷ்ய ஸர்வே ।*
*ஸித்$_3$த$_4$ாந்தநிர்த்த$_4$ாரணஸார்வ*
*பெ$_4$ளமஸ்ஸத்யம் ப$_4$விஷ்யத்யயமித்ய*
*வோசந் ॥*

(37)

**அக்கணத்திலேயே ஆளவந்தாருடைய மடங்கிய மூன்று விரல்களும் முன் போல் நிமிர்ந்தன. அதைக்கண்ட அனைவரும் "இவரே வைதிகஸித்தாந்தத்தை நிலைநிறுத்துமவர்களுக்குத் தலைவராவார் என்பது உறுதி" என்று உரைத்தார்கள்.**

**– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது**

*875. ஓம் அபிப்ராய: நம:*

நல்லோரால், தானே இறுதிப் பயனாக நினைக்கப்படுபவன்.

*ஓம் விபூதி: நம:*

பற்பல விதமான செல்வங்களை உடையவள்.

*876. ஓம் ப்ரயார்ஹ: நம:*

அடியார்களுக்கு அருள்பவன்.

*ஓம் நிஷ்கலா: நம:*

ஸுத்வஸ்த்வ திருமேனி உள்ளவள்.

*877. ஓம் அர்ஹ: நம:*

ஞானிகளுக்கு அடைக்கலமானவன்.

*ஓம் ரம்பா: நம:*

சேவிப்பவர் மகிழும் திருமேனி உடையவள்.

*878. ஓம் ப்ரியக்ருத் நம:*

யாவரும் தன்னையே விரும்பும்படி செய்பவன்.

*ஓம் ரக்ஷா: நம:*

ரக்ஷிப்பதே கடமை என்று இருப்பவள்.

*879. ஓம் ப்ரீதிவர்த்தந: நம:*

பக்தர்களின் பக்தியை வளர்ப்பவன்.

*ஓம் ஸுவிமாலா: நம:*

அரைகுறைப் பலனை அளிக்காதவள்.

*880. ஓம் விஹாயஸகதி: நம:*

அடியவர் பரமபதம் அடைய உபாயமாக இருப்பவன்.

*ஓம் க்ஷமா: நம:*

பொறுமையே உருவானவள்.

*ஸ்ரீமதே ருக்மிணீ சமேதாய ஸகுடும்பாய பார்த்தஸாரதி (உத்ஸவ மூர்த்தி) ரூப ஸமேத ஸ்ரீவேங்கடக்ருஷ்ண (மூலவர்) பர ப்ரம்மணே நம:*

*ஸ்ரீமதே வேதவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீரங்கநாத (மந்நாத) (என்னையாளுடையப்பன்) பர ப்ரம்மணே நம:*

*ஸ்ரீமதே ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஸமேத ஹநுமத் வந்தித ஸ்ரீராமபத்ர பர ப்ரம்மணே நம:*

*கருடாரூடாய ஸ்ரீவரதராஜ பர ப்ரம்மணே நம:*

*ஸ்ரீஸுப்ரதீக நரஸிம்ஹ (தெள்ளிய சிங்கர்) பர ப்ரம்மணே நம:*

குறிப்பு :

சென்னை சென்டரல் இரயில் நிலையத்திலிருந்து சுமார் 4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இதற்கு பேருந்து மற்றும் இரயில் போக்குவரத்தும் உள்ளது. திருவல்லிக்கேணி இரயில் நிலையத்திற்கு மிக அருகில் இந்த திவ்ய தேசம் அமைந்துள்ளது.

*திவ்யதேச தரிசனம் தொடரும்...*

## 2025, ஏப்ரல் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 03–11 | வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 06 ஸ்ரீராமநவமி |
| 07 | திருப்பதி ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி திருக்கல்யாணம் |
| 08 | திருப்பதி ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி பட்டாபிஷேகம் |
| 06–14 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 10–12 | திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம், |
| 11 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருக்கல்யாண உத்ஸவம் |
| 12 | தும்புரு தீர்த்த முக்கோட்டி |
| 14 | தமிழ் வருட பிறப்பு (ஸ்ரீவிசுவாவசு வருடம்) |
| 30 | பரசுராம ஜெயந்தி, அக்ஷய திருதியை |

# திருவேங்கடவன் திருவருள்

நான் சென்ற 25 ஆண்டுகளாக அஞ்சலக சிறு சேமிப்பு முகவராக நேர்மையாகப் பணிபுரிந்து வந்தேன். சென்ற வருட முடிவில் என் மகனுடன் வெளியூரில் சென்று தங்க வேண்டிய காரணத்தால் என் முகவர் உரிமத்தில் உள்ள அனைத்துப் புத்தகங்களையும் விடிவித்து உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு மகனிடம் வந்து விட்டேன். பின் 3 மாதங்கள் கழித்து சொந்த ஊருக்குச் சென்றேன்.

அப்பொழுது ஒரு வாடிக்கையாளர் என்னிடம் அவர் ஜனவரி மாதம் ஆர்.டி. கணக்குத் தொடங்க பணம் கொடுத்ததாகவும், நான் பிப்ரவரியில் கணக்கை ஆரம்பித்துள்ளதாகவும், புத்தகத்தில் பதிவாகி இருப்பதாகக் கூறி "அஸ்லாஸ்கார்டை" காட்டும்படி கூறினார்.

நான் வாடிக்கையாளர்கள் பணம் கொடுக்கும் தேதி, தொகை, மாதம் ஆகியவற்றை என் டைரியில் குறித்துக் கொள்வேன். புதிய கணக்கு என்று பின்பு அஞ்சலகத்தில் கணக்கு ஆரம்பித்து "பாஸ் புத்தகம்" வாங்கி வந்து முகவர்கள் வசம் இருக்கும் அனைத்தும் குறித்து கொடுத்து அவர்களிடமும் இருக்கும்படி ஏற்பாடு செய்வோம். ஒரு சில மாதங்கள் கழித்து அந்த வாடிக்கையாளர், உங்களிடம் இருக்கட்டும் என்று கூறி என்னிடம் கொடுத்தார். நான் அப்பொழுதும் இது உங்களிடம் தான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எத்தனை மாதங்கள் பணம் செலுத்தியுள்ளோம் என அறிய முடியும் என்றேன். பரவாயில்லை உங்களிடமே இருக்கட்டும் என்னால் அடிக்கடி தேட முடியவில்லை என்றார். கணக்கு தொடங்கிய தேதி, மாதத்தை சரிபார்க்க இப்பொழுது அதைக் கேட்டார்.

அவரிடம் நான், மறுமுறை ஊருக்கு வரும்பொழுது தேடிப் பார்க்கிறேன். கிடைக்கவில்லை எனில் ஒரு மாத தொகையைக் கொடுத்து விடுகிறேன் எனக் கூறிவிட்டு மகனிடம் வந்து விட்டேன். என் பணி நாட்களில் இம்மாதிரி ஒரு சம்பவம் நடந்ததே இல்லை. எனக்கு நிம்மதியே இல்லை. மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். நான் பணத்தை கொடுக்கா விட்டாலும், அவர்கள் பல பேரிடம் சொல்வார்களே, நம் பெயர் கெட்டு விடுமே என்று வேதனையுற்றேன்.

நான் திரும்ப ஊருக்கு வந்தபொழுது மறுபடியும் கார்டைத் தேடினேன். என்ன ஆச்சர்யம்! அஸ்லாஸ் கார்டு கிடைக்கவில்லை. நான் மாதாமாதம் வாடிக்கையாளரிடம் பணம் பெற்று குறித்து வைக்கும் என் டைரி கிடைத்தது. என் அப்பன் திருமலை வாசனை மனமுருக வேண்டியபடி மாதம் வாரியாக பார்த்து வந்தேன். பகவான் ஸ்ரீநிவாசனின் கருணையே கருணை! என் மன உளைச்சலைப் போக்கி, என் நாணயத்தையும் காப்பாற்றி விட்டார். அவர்களின் ஆர்.டி. கணக்கு பிப்ரவரியில் "புதிய கணக்கு" எனக் குறிப்பிட்டு நான் பணம் பெற்றதை வாடிக்கையாளரிடம் காண்பித்து, அவர்களின் சந்தேகம் தீர்த்து வைத்தேன். என் மன உளைச்சலையும் போக்கி, வாடிக்கையாளரின் சந்தேகத்தையும் தீர்த்து வைக்க ஆபத்பாந்தவன், அனாதை ரக்ஷகனான திருவேங்கடவனைத் தவிர வேறு யாரால் முடியும்!



**– திருமதி மு. இராஜகுமாரி வெங்கடேசன்,**
**ஆரணி, 99762 38430**

திருவரங்கம் கோயிலில் உள்ள மூலமூர்த்தி சிலை வடிவம் பிரம்மாவின் தவத்தின் பயனாக திருப்பாற் கடலிலிருந்து வெளிப்பட்டு தோன்றியதாகும். (இதை சுயம்பு என்றும் கூறுவர்). இம்மூர்த்தியை நித்திய பூசை செய்ய சூரியனை நியமித்தார் பிரம்ம தேவன். பிறகு சூரிய குலத்தில் பிறந்த அரசன் இக்ஷ்வாகு இம்மூர்த்தியைத் தனது தலைநகரமாகிய அயோத்திக்கு எடுத்துச் சென்று வழிபட்டு வந்தான். அவனின் வம்சாவளியில் வந்த ஸ்ரீராமர் இலங்கையிலிருந்து தனது பட்டாபிஷேகத்துக்கு வந்த விபீஷணன் அம்மூர்த்தியை விரும்பியதால் அதனை பரிசாகக் கொடுத்தார். விபீஷணன் அம்மூர்த்தியை மகிழ்ச்சியுடன் தனது தலையின் மீது சுமந்து இலங்கைக்கு எடுத்துச் செல்கையில் வழியில் காவிரியாற்றின் கரையை அடைந்தான்.

அச்சிலையைக் கீழே இறக்கி வைக்க மனம் வரவில்லை. ஆதலால், அங்கு ஆட்டு மந்தையை மேய்த்து கொண்டு இருந்த சிறுவனிடம் அச்சிலையைக் கொடுத்து, கீழே வைக்க வேண்டாம் எனக்கூறி இளைப்பாறினான். சிறுவன் சிலையைக் கீழே வைத்து விட, விபீஷணன் “சிறுவனே என்ன காரியம் செய்தாய்” எனக் கூறி சிலையை எடுத்தான். எடுக்க முடியவில்லை. எவ்வளவோ முயன்று பார்த்தான். கலங்கினான். பின் சிறுவனாக வந்த விநாயகப் பெருமான் சிலையைக் கீழே வைத்தது நான் தான் என்று கூறி மறைந்தார். இவ்வரலாற்றின்படி விநாயகருக்கு காவிரி ஆற்றின் மற்றொரு கரையில் கோயில் உள்ளது. அதுவே மலை மீது இருக்கும் மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயில். திருவரங்கம் கோயிலுக்கு எதிரில் அமைந்துள்ளது.

பின் வைகுண்ட பெருமாள் அரங்கநாதராக காட்சியளித்து காவிரிக்கரையிலேயே தங்கியிருக்க விருப்பம் தெரிவித்தார். அங்கு சோழ நாட்டை ஆண்டு வந்த தர்மவர்ம சோழன் ஆறுதல் கூறினார். ஸ்ரீரங்கநாதரும் விபீஷணனுக்காக, தான் “தென் திசை இலங்கை நோக்கி” பள்ளி கொண்டு அருள்வதாக உறுதியளித்தார். தர்மவர்ம சோழன் அச்சிலையைச் சுற்றி கோயில் எழுப்பி வழிபாடு செய்தான். பின் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கோயில் மணலால் மூடப்பட்டது. சோழ மன்னன் ஒருவன் மணலால் மூடிய கோயிலை ஒரு கிளியின் உதவியுடன் கண்டுபிடித்ததால் கிளிச்சோழன் என்று அழைக்கப் பெற்றான். அக் கோயிலை புனரமைத்து, அரங்க நாதருக்கு பிரம்மாண்டமான பெரிய கோயிலைக் கட்டினான் கிளிச் சோழன். அக்கோயிலே தற்போது வழி படப்படும் அரங்கநாதர் கோயிலாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





மேற்படி தல புராண வரலாற்றை நாளும் உலகுக்கு எடுத்துரைக்கும் வண்ணம் திருவரங்க கோயில் தூண் ஒன்றில் இச்சிற்ப வடிவமும், கும்பகோணம் இராம ஸ்வாமி கோயில் பிரகாரத்தில் சுதை வேலைப்பாடுடன் கூடிய ஓவியமும் அமையப் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

# திருவரங்கம் வரலாற்று சிற்பம்

- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 8610819456.







# பெண்கள் குங்குமம் அணிவதால் பலன்கள்

- பி. கவிதா, சிதம்பரம், 98425 50844

பொதுவாக சுமங்கலிப் பெண்கள் நெற்றி நிறைய குங்குமம் அணிவார்கள். குங்குமம் ஒரு மங்கலகரமான பொருள். இதை அணிந்ததும் பெண்கள் மங்கலகரமாகக் காட்சியளிப்பர். தெய்வீகக் கடாட்சம் அவர்களது முகத்தில் ஒளி வீசும். அது பெண்களுக்கே தனி அழகைக் கொடுக்கும்.

மேலும், நமது பாரம்பரிய பண்பாட்டையும் பறைசாற்றும். குங்குமம் அணிவது இதற்கு மட்டும்தானா என்றால் கிடையாது. அதில் அறிவியல்பூர்வமான நிறைய காரணங்களும் உள்ளன. அவை என்னென்ன என்று பார்க்கலாமா. சுமங்கலிகளின் சக்தி குங்குமத்தில் உள்ளது. குங்குமம் லக்ஷ்மி கடாக்ஷம் மிக்கது. பெண்கள் குங்குமம் இடுவதால் மஹாலக்ஷ்மியின் அருளை நிரந்தரமாகப் பெறுகிறார்கள். குங்குமத்தை மோதிர விரலால் தான் இட வேண்டும். சிவப்பு நிற குங்குமமே புனிதமானது. பிற வண்ணங்களில் குங்குமம் இடுதல் கூடாது.

மாங்கல்யம், நெற்றி, தலைவகிடின் ஆரம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் லக்ஷ்மி தேவி உறைகின்றாள். இந்த மூன்று இடங்களிலும் குங்குமத்தை இடுவதே உத்தமமானது. கோயிலில் குங்குமத்தைப் பெறுகையில் வலது கையில் வாங்கி இடது கைக்கு மாற்றுதல் கூடாது. வலது உள்ளங்கையில் குங்குமத்தைப் பெற்று அந்நிலையிலேயே வலது மோதிர விரலை வளைத்து, குங்குமத்தைத் தொட்டு நெற்றிக்கு இடும் புனிதமான முறையினால் தான் குங்குமத்தின் பரிபூரண தெய்வீகச் சக்தியைப் பெற முடியும்.

இக்குங்குமத்தை அறிவியல் ரீதியாக பார்த்தால், படிகாரம், சுண்ணாம்பு தண்ணீர், மஞ்சள் ஆகிய மூன்றையும் சேர்த்துதான் குங்குமம் தயாரிக்கிறார்கள். இதில் சேர்க்கப்படும் மஞ்சள் நாளடைவில் இரும்புச் சத்தாக மாறி விடும். படிகாரம் கிருமி நாசினி என்பதால் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் வரவே வராது. தொற்றுநோய் கிருமிகளும் நெருங்காது. மூளைக்குச் செல்லும் நரம்புகள் அதிகமான உஷ்ணத்தை மூளைக்கு அனுப்பாமல், அதைக் கட்டுப்படுத்தக்கூடிய பகுதி நெற்றி ஆகும். ஆகவே குங்குமம் இடுவதால் அந்த சூடு தணிகிறது. சுமங்கலிப் பெண்களின் தலை வகிட்டின் நுனியைச் சீமந்த பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர்களுக்கு சேமத்தைக் கொடுக்கும்.

சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் மஹாலக்ஷ்மி இருப்பிடம். சுமங்கலிகளின் சக்தி குங்குமத்தில் உள்ளது. வீட்டிற்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர், பெறுபவர் இருவருக்கும் மாங்கல்யத்தின் பலத்தைப் பெருக்கும். குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளைத் தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம். பெண்கள் குங்குமத்தை தான் இட்டுக் கொண்ட பின்பு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.



அரக்கு நிற குங்குமம் சிவசக்தியை ஒரு சேரக் குறிப்பதாகும். திருமணப்புடவை அரக்கு நிறத்தில் இருப்பது நல்லது. தெய்வீகத் தன்மை, சுபதன்மை, மருத்துவத்தன்மை உள்ள குங்குமம் அணிவதால் முகம், உடல் மற்றும் மனதிற்கு அதிக நன்மைகள் உண்டாகும்.



## திருமலையில் பிளாஸ்டிக் பொருட்கள் தடை



புண்ணியத் திருத்தலமாம் திருமலையின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி செய்ய வேண்டும். இதனை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில் கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்தரத் தடை விதித்துள்ளது.

எனவே, பக்தர்களும் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். துணிப்பைகளையும், பிளாஷ்டிக் அல்லாத குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழங்கும் ஜலப்பிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலையின் சுற்றுபுறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடமையாகும்.

திருமணமான பெண்கள் நெற்றி நடுவிலும், வகிட்டின் தொடக்கத்திலும் குங்குமம் அணிவது சிறப்பு. ஆண்கள் இரு புருவங்களையும் இணைத்தாற்போல் குங்குமம் அணிவது தன்னம்பிக்கையை அதிகரிக்கும். கட்டை விரலால் குங்குமம் இட்டுக் கொள்வது மிகுந்த துணிவைக் கொடுக்கும்.

குருவிரலால் (ஆள்காட்டி விரல்) குங்குமம் அணிவது முன்னனித்தன்மை, நிர்வாகம், ஆளுமை போன்றவற்றை ஊக்குவிக்கும். சனி விரல் (நடுவிரல்) குங்குமம் இட்டுக் கொள்வது தீர்க்காயுளைக் கொடுக்கும். குங்குமம் அணிவது தெய்வீகத் தன்மை, உடல் குளிர்ச்சி மற்றும் சுயக் கட்டுபாட்டிற்கு நல்லது.

## ஸப்தகிரி ஜனவரி 2025 விடைகள்

1. தை, மகம்.
2. திருநின்றவூர்.
3. திருவரங்கம்.
4. திருவரங்கப் பெருமான்.
5. ஆண்டாள்.
6. திருவாதிரை.
7. திருக்கச்சி நம்பிகள்.
8. இராமபிரான்.
9. என்னைப்பெற்றத்தாயார்.
10. போகிப்பண்டிகை.
11. திருமலையப்பன்.
12. ஆண்டாள்.
13. பஞ்சமி.
14. பாரதியார்.
15. ஆண்டாள்.




## போட்டி எண். 30

சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்

1. செல்வி ஐ.ருத்விமாதவி
   திருவானைக்கோவில், திருச்சி மாவட்டம்.
2. செல்வன் கே.எஸ்.மாதவ்
   அம்பத்தூர், சென்னை.
3. செல்வி சௌகந்திகஸ்ரீ
   சிதம்பூண்டி, நாமக்கல் மாவட்டம்.

## அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்



# இராமாநுசர்


- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி
வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972


சென்ற இதழின் தொடர்ச்சி...

**எண்டிசை எண் இளையாழ்வார் எதிராசன் வாழியே**
**எழுபத்து நால்வர்க்கு எண்ணான்கு உரைத்தான் வாழியே**
**பண்டை மறையைத் தெரிந்த பாடியத்தோன் வாழியே**
**பரகாலன் அடி இணையைப் பரவுமவன் வாழியே**
**தண்டமிழ்நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே**
**தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே**
**தெண்டிரைசூழ் பூதூரெம்பெருமானார் வாழியே**
**சித்திரையில் செய்ய திருவாதிரையோன் வாழியே**

**பதவுரை :**

எண் திசை – எட்டு திசையில் உள்ளவர்களும், எண் – எண்ணப்படுகிற, இளையாழ்வார் எதிராசன் – இளையாழ்வார் என்கிற எதிராஜர், வாழியே – வாழ வேண்டும். எழுபத்து நால்வருக்கு – எழுபத்து நான்கு சீடர்களுக்கு, எண்ணான்கு – முப்பத்து இரண்டு எழுத்துக்கள் கொண்ட சரம சுலோகத்தை, உரைத்தான் – உபதேசித்தவர். பண்டை மறையை – பழையதான நான்கு வேதத்தை, தெரிந்த – அறிந்து, பாடியத்தோன் – பாஷ்யம் செய்தவர், வாழியே , பரகாலன் அடி இணையை – திருமங்கையாழ்வார் இரு திருவடியை, பரவுமவன் – போற்றுபவர், வாழியே, தண்தமிழ் நூல் – ஈரத்தமிழாலே செய்த திவ்ய ப்ரபந்தங்கள் அருளிய, நம்மாழ்வார் – நம்மாழ்வாரானவர், சரணானான் – திருவடியைப் பணிந்தவரான இராமாநுசர், வாழியே, தாரணியும் – இந்த உலகமும், விண்ணுலகும் – பரமபதமும், தானுடையோன் – தனக்கு உடைமையாகப் பெற்ற இராமாநுசர், வாழியே, தெண்டிரைசூழ் – குளிர்ச்சியான அலைகளால் சூழப்பட்ட , பூதூர் – ஸ்ரீபெரும்பூதூர், எம்பெருமானார் – இராமாநுசர் , வாழியே. சித்திரையில் – சித்திரை மாதத்தில், செய்ய – சிவந்த நிறமுடைய, திருவாதிரையோன் – திருவாதிரை நக்ஷத்ரத்தில் அவதரித்த இராமாநுசர், வாழியே – வாழ வேண்டும்.

**சிறப்புரை**

(எண்டிசை எண் இளையாழ்வார் எதிராசன் வாழியே) எட்டுத்திக்கிலும் உள்ளவர்கள் எண்ணும்படியானவர் இளையாழ்வாரான எதிராசர் ஆவர். திக்குற்ற கீர்த்தி என்று அமுதனார் அருளியபடியே எட்டு திக்கிலும் அறுசமயச்செடியதனை அடி அறுத்ததும், தற்கச்சமணரும் சாக்கிய பேய்களும் தாழ்சடையன் சொல்கற்ற சோம்பர் முதலானோர்களுடைய துர்மதங்களை வேரோடு களைந்து

ஒழித்தவர் என்கிற குணப்புகழை உடையவர். மேலும், ***"திசை அனைத்தும் ஏறும் குணனை"*** என்று அமுதனார் அருளியபடியே "திக்குகள் எங்கும் பரந்துள்ள குணப்பெருமை" உடையவர் என்றபடி.

இராமாநுசருக்கு அம்மானாகிய பெரிய திருமலை நம்பிகள் குழந்தை அவதரித்தவுடன் வந்து கண்டு "இளைய பெருமாளைப்போல எல்லா கைங்கர்யங்களையும் செய்வர் இவர்" என்று திருவுள்ளத்தில் தோன்றியதால் தம் மருமகனாரான எம்பெருமானாருக்கு இளையாழ்வார் என்று பெயரிட்டதாக குருபரம்பராப்ரபாவ நூல் கூறும்.

எதிராசன் – "***யதீநாம் ராஜா - யதிராஜ:***. துறவிகளுக்கு எல்லாம் தலைவர். யதிகள் யாவரிலும் மேம்பட்டிருப்பவர். இராமாநுசர் காஞ்சியில் ஸந்யாஸ ஆச்ரமம் கொள்ளும்போது தேவப்பெருமாள் இட்ட பெயர் எதிராஜர். அப்படிப்பட்டவர் நித்யமாக வாழ வேண்டும்.

(எழுபத்து நால்வர்க்கு எண்ணான்கு உரைத்தான் வாழியே) இராமாநுசரின் திருவடிகளில் சீடர்களாகச் சேர்ந்தவர்கள் ஆளவந்தார் குமாரர் தொடக்கமாக ஆர்க்காட்டுப் பிள்ளான் வரையிலான எழுபத்து நான்கு ஆசார்யர்களாவர். அவர்களுக்கு இராமாநுசர் முப்பத்து இரண்டு எழுத்துக்கள் கொண்ட ***"ஸர்வதர்மாந் பரித்ஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:"*** என்று பகவத் கீதையில் பதினெட்டாம் அத்யாயத்தில் 66வது சுலோகமான சரம சுலோகத்தை உபதேசித்தார் என்பது அறியற்பாலதாகும்.

*இராமாநுஜர் வாழித்திருநாம உரை தொடரும்...*

சாந்த்ரமானம்படி "உகாதி"யுடன் தெலுங்கு வருடப்பிறப்பு தொடங்குகின்றது."ருதுவில் வசந்தருது நான்" என்கிறார் கீதாசார்யன். செடிகள் எல்லாம் பூவுடனும், காயுடனும், பழங்களுடனும் காட்சியளித்து "எங்கள் வாழ்வெல்லாம் மாதவ சேவைக்கே" என்று வரவேற்கின்றன.

"உகாதி" முதன்மையாக–பிற விரதங்கள், பண்டிகைகள் போல் இன்றி முடிவில்லாத காலத்தை வருடமாகக் கணித்து வருடப் பிறப்பன்று காலத்தை நம் இஷ்ட தெய்வ வடிவமாக, சகலதேவதா வடிவமாக எண்ணி, அவ்வருடத்தின் பலன்களை முன்பாக அறிந்து, அந்தந்த சமயங்களில் தெய்வ அனுக்கிரக ப்ராப்திக்காக செய்ய வேண்டிய சாதனங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் ஒரு நல்ல சாத்திர திட்டத்திற்கு முன்னேற்பாடு செய்வதே உகாதியின் சிறப்பு.

உகாதி அன்று பஞ்சாங்கம் வாசிப்பர். பஞ்சாங்கம் 1) திதி, 2) வாரம், 3) நட்சத்திரம், 4) யோகம், 5)கரணங்கள் என ஐந்து அங்கங்களை கொண்டது. காலவடிவினனான ஜனார்த்தனன் நிவாஸம் செய்வது திதி. ஜனார்த்தனனை சேவித்து ஒரு கிரஹம் பிரதட்சணை செய்யும் தினம் வாரம், நாசனம் ஆகாமல் காப்பாற்றுவது நட்சத்திரம். சந்திரன் நட்சத்திரத்துடன் இணைந்து இருக்கும் காலம் யோகம். சாதனையே கரணம் என்கின்றனர்.

யுகாதியன்று பஞ்சாங்க சிரவணம் முறையாக நிர்வகிக்கின்றனர். ஆண்டின் பலனைக் கேட்பதே பஞ்சாங்க ஸ்வரணம். புதிய வருடத்தில் தேசத்திற்கும், மாநிலத்திற்கும் வரும் ஏற்றத் தாழ்வுகள், வெற்றிதோல்விகள், பயிர்களின் வளர்ச்சிகள், மனிதர்களின் நட்சத்திரங்களை அனுசரித்து நடக்கப் போகின்றவை, கிரஹணங்கள் போன்ற அனைத்து விஷயங்களும் பஞ்சாங்கத்தின் மூலமாகத் தெரிகின்றது.

பஞ்சாங்க ஸ்ரவணம் மனிதனுக்கு அந்த ஆண்டு காலத்தின் வெற்றி தோல்விகள், எதிர்படும் கஷ்டங்களை முன்பே அறிவிப்பதால் அவர்கள் தகுந்த ஜாக்கிரதை யுடன் இருக்க அவகாசமுள்ளது. யுகாதியன்று புரோகிதர் களின் மூலமாக பஞ்சாங்கத்தைப் படிக்க வைத்து வருடத் தின் பெயர், வருடத்தின் அதிபதி, வருண தேவதை, தன தானியங்களின் அதிதேவதைகள் பெயர்கள் போன்ற வற்றைக் கேட்க வேண்டும் என்றும், அந்த நாளின் பஞ்சாங்க ஸ்ரவணத்தினால் கங்கா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும் என்பது சாஸ்த்திரங்களின் கூற்று.



ஆயுர் வேதம்

# பிரியாணி இலை







**தெலுங்கு மூலம்:**
**டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.**
**தமிழாக்கம்: திருமதி வி.உஷா, திருப்பதி.**

பிரியாணி இலை, துங்கமஸ்து, ஏலக்காய், நெல்லிக்காய், பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி போன்றவற்றை 10 கிராம் அளவு எடுத்து பொடி செய்து கொண்டு அதனுடன் 120 கி. வெல்லப் பொடியைக் கலந்து நாள்தோறும் இரண்டு வேளை அரை டீஸ்பூன் பொடியை 100 மி.லி. நீரில் கலந்து குடித்தால் தலைவலி, வாந்தி, கண் சுற்றுதல், வாயில் நீர் ஊறல் போன்ற பிரச்சனைகள் குறையும்.

400 மி.லி. நீரில் 30 பிரியாணி இலைகளைத் துண்டித்து போட்டு 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, ஆறிய பின் வடிகட்டி ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு, 2 வேளை 50 மி.லி. அளவு குடித்து வந்தால் அதி எடை குறையும்.

நாள்தோறும் ஒரு முறை 200 மி.லி. நீரில் 15 பிரியாணி இலைகளை நறுக்கி போட்டு 50 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து இறக்கிய பின் வெதுவெதுப்பாக உள்ளபோது சிட்டிகை பட்டைப் பொடி சேர்த்து குடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் கொழுப்புச்சத்து மற்றும் சர்க்கரை வியாதி கட்டுப்பாட்டுடன் இருக்கும்.

300 மி.லி. நீரில் 4,5 இலைகளை கத்தரித்து போட்டு சிறிது இஞ்சித் துண்டுகளை இடித்துப் போட்டு 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, ஆறியபின் வடிகட்டி இரண்டு முறை 50 மி.லி. பயன்படுத்தி வந்தால் ஜீரணச் சக்தி அதிகரிக்கும். ஜீரணக்குழாய் சம்பந்தப் பட்ட வியாதிகள் நீங்கும்.

பிரியாணி இலை 50 கிராம், அதிமதுரப் பொடி 50 கிராம், கற்கண்டு பொடி 200 கிராம் ஆகியவற்றை நன்கு கலந்து வைத்துக் கொள்ளவும்.

அதனை நாள்தோறும் காலை மாலை இரு வேளைகளில் அரை டீஸ்பூன் பொடியை 50 மி.லி. வெதுவெதுப்பான பாலுடன் சேர்த்து குடித்து வந்தால் மன உலைச்சல் குறைந்து மனம் அமைதியாக இருக்கும்.

பிரியாணி இலை, ஜாபத்ரி, லவங்கம், வெந்தயம் ஆகியவற்றின் பொடிகளை 10 எடுத்து கொள்ளவும். நாள்தோறும் 2 அல்லது 3 முறை 3 அல்லது 4 சிட்டிகை வாயில் போட்டுக் கொண்டால் வாய் துர்நாற்றம் குறையும்.

பிரியாணி இலை, வெட்டிவேர், ஏலக்காய், துங்கமஸ்து, கந்தகப்பொடி, நாகேசரால பொடி ஆகியவற்றை இரு கிராம் வீதம் எடுத்து நன்கு கலந்து வைத்துக் கொள்ளவும்.

பின்னர் வாரத்திற்கு 2 அல்லது 3 முறை தகுந்தளவு நீர் சேர்த்து உடம்பிற்கு பூசிக் கொண்டு வந்தால் அரிப்பு, தடிப்புகள், தழும்புகள் ஆகியவையும் மறையும்.

பிரியாணி இலை 50 கிராம், வெந்தயப் பொடி 50 கிராம், நாவற்பூக்கொட்டையின் பொடி 100 கிராம், வில்வ இலைப்பொடி 100 கிராம் ஆகியவற்றை நன்கு கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதனை உட்கொண்டால் சர்க்கரை வியாதி கட்டுப்பாட்டுடன் இருக்கும். மேலே குறிப்பிட்ட சில மருந்துகள் எல் லாம் ஆயுர் வேத கடைகளில் கிடைக்கும்.



# மார்ச் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். இளைய சகோதரனுக்கு ஆரோக்கியக் குறைவுண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பெண்களுக்கு குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். மொத்தத்தில் தன லாபமும், தொழில் விருத்தியும் அடையும் மாதமிது.

**ரிஷபம்**

தொழில் துறையில் போட்டியால் வெற்றியும், நல்ல லாபமும் உண்டு. நினைத்ததைச் சாதீப்பீர்கள். கோபத்தைத் தவிர்க்கவும். பழைய வாகனம் வாங்குவதைத் தவிர்க்கவும். ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. குடும்ப உறுப்பினர்களிடம் பேசும் போது வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். மொத்தத்தில் நல்ல யோகமான மாதமிது.

**மிதுனம்**

ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. தொழில் அலைச்சல் காரணமாகத் தூக்கம் குறையும். தொழில் விருத்தி காரணமாக செலவினங்கள் அதிகமாகும். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. பெண்களுக்கு தொழில் துறையில் முன்னேற்றமுண்டு. ஆரோக்கியத்தில் அக்கறையாக இருக்க வேண்டிய மாதமிது.

**கடகம்**

இம்மாதம் எந்தச் செயலைச் செய்ய வேண்டுமானாலும் மிகுந்த அக்கறை தேவை. முக்கியமாக ஆரோக்கியத் தில் மிகுந்த கவனம் தேவை. தாயாருக்கு வயிற்றில் கோளாறு உண்டாகும். தொழில்துறையில் புதிய முயற்சி களைத் தவிர்க்கவும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்களைப் பெற கடுமையாக உழைக்க வேண்டும். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**சிம்மம்**

திருஷ்டியினால் தொழில் துறையில் பாதிப்பு உண்டாகும். நண்பர்களால் லாபம் உண்டு. தொழில் துறையில் சில மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். உடல் வலியினால் அவதி உண்டாகும்.புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு விரைவில் இடமாற்றம் உண்டு. மாணவர்கள் ஓரளவு நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத்தில் மாற்றமும், வளர்ச்சியும் கொண்ட மாதமிது.

**கன்னி**

தொழில்துறையில் கடுமையாக உழைத்து நல்ல லாபத்தைப் பெறுவீர்கள். தாயாரின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. பழைய பாக்கிகள் வசூலாகும். தாராள பணப்புழக்கம் உண்டு. மனைவியால் தன லாபம் உண்டு.தொழில் போட்டியில் வெற்றி உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ அனுக்கிரகத்தால் போற்றுதலுக்குரிய மாதமிது.

**துலாம்**

பண விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் முற்றிலுமாகத் தவிர்க்கவும். அஜீரணம் ஏற்படுத்தும் உணவுகளை முற்றிலுமாகத் தவிர்க்கவும். குழந்தைகள் பிடிவாதம் பிடிப்பர். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகளை இம்மாதம் தவிர்க்கவும். மிகவும் கஷ்டப்பட்டு முன்னேறும் மாதமிது.

**விருச்சிகம்**

தொழில் துறை வளர்ச்சிக்காக அலைச்சல் மிகுதியாக இருக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும்.மனைவி மற்றும் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு பிறகு சரியாகும்.புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு.தாயாரின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. தெய்வ அனுக்கிரகம் கூடிய மாதமிது.

**தனுசு**

கடன் வாங்கி சுபச் செலவுகள் செய்வீர். தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. கணவன் மனைவிக்குள் சிறு கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு பிறகு சரியாகும். சகோதர சகோதரிகளால் பிரச்சனை உண்டு. புது வாகனம், தங்கம், வெள்ளி நகைகள் வாங்கும் யோகம் உண்டு.பெற்றோரின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடுமையாக உழைத்து முன்னேறும் மாதமிது.

**மகரம்**

குடும்பத்தில் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். தொழில் துறையில் போட்டி அதிகமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும்.பெண்களுக்கு குடும்பத்தில் சிறு பிரச்சனை ஏற்பட்டு பின்னர் சரியாகும். மாதத்தின் பிற்பாதியில் நல்ல யோகம் உண்டு. மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். சிரமப்பட்டு முன்னேறும் மாதமிது.

**கும்பம்**

ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும்.பெற்றோரால் நல்ல அனுகூலம் உண்டு. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பெண்களுக்கு உறவினர்களின் ஆதரவு உண்டு.பல துறைகளிலும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறும் மாதமிது.

**மீனம்**

வரவிற்கேற்ற செலவு உண்டு.வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனம் வாங்க வேண்டாம். ஆரோக்கிய குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். மனைவியின் ஆரோக்கியம் மேம்படும். பெண்களுக்கு நல்ல முன்னேற்றமும், பொது வெளியில் மரியாதையும் இருக்கும். பொதுவாக நல்ல முன்னேற்றமான மாதமிது.

## நீதிக்கதை

# வாழ்க்கையே ஒரு தவம் தான்!



**கதையின் நீதி :**

வாழ்வில் சுகமும் துக்கமும் ஆபத்தானவை. எதிலும் சமநிலைதான் சரியான வழி.

**திரு. எம். அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி,**
**975033326**

பதறாத காரியம் சிதறாது. பரபரப்பு காரியத்தை கெடுத்து விடுகிறது. சமநிலையில் எடுக்கப்பட்ட முடிவுகள் சமவெளியில் உருவான நாகரீகம்போன்றது.

திருப்பதி பெருமாளுக்கு பூ கட்டும் திருப்பணியைச் செய்தவர் அனந்தாழ்வான் என்ற அடியவர். ஒரு நாள் பூக்கள் தொடுக்கும் போது பாம்பு அவரது காலினைத் தீண்டியது. பதறாமல் பூமாலைக் கட்டி பெருமாளுக்கு சாற்றப் போனார். பெருமாள் பதறினாராம்.

பாம்பு கடித்துவிட்டதே என்று பெருமாள் கூறியதற்கு அனந்தாழ்வார், “ஸ்வாமி, கடித்த பாம்புக்கு விஷம் அதிகம் என்றால் கைங்கர்யம் அங்கே, கடியுண்ட பாம்புக்கு விஷம் அதிகமானால் கைங்கர்யம் இங்கே. பின் என்ன கவலை” என்றார். பாம்பு கடித்து விஷம் அதிகமானால் வைகுந்தம். அங்கும் மாலை கட்டி தொண்டு செய்யலாம். அப்படி இறக்கவில்லை என்றால் இங்கேயே தொடர்ந்து திருப்பணி செய்யலாம் என்று உறுதியாக அனந்தாழ்வான் கூறினார்.

நம்மவர்களின் பலர் கஷ்டங்களால் சாவதை விட கஷ்டங்கள் பற்றிய கற்பனையிலேயே சாகிறார்கள். ஆபத்துக்களை விட ஆபத்துக்கள் பற்றிய கற்பனைதான் ஆபத்தானவை.

இரயில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஒருவர் தன் கையை வெளியே தொங்க விட்டு இருந்தார். திடீர் என்று அவரது விலையுயர்ந்த கை கடிகாரம் கழன்று கீழே விழுந்தது. அவர் பதறித் துடித்தார். ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த மற்றொரு நபர் அவர் துயரத்தில் சிறிதும் பங்கேற்கவில்லை. எவ்வித சலனமும் இன்றி வெளியில் வேடிக்கை பார்த்தபடியே பயணம் செய்கிறார். அடுத்த இரயில் நிலையத்தில் ஒரு அதிகாரியை அழைத்து இங்கிருந்து இத்தனையாவது தந்திக் கம்பத்துக்கு அடியில் கடிகாரம் கிடக்கிறது. அதை எடுத்து எதிரில் உள்ளவர் முகவரிக்கு சேர்ப்பிக்கும்படி அறிவுறுத்தினார். அவர் ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்தாரா? இல்லை. தந்திக் கம்பங்களை எண்ணிக் கொண்டு வந்துள்ளார்.

மரண தண்டனைக்குரிய கைதிக்காக ஒருவர் வாதாடிக் கொண்டிருந்தபோது மனைவி மரணம் அடைந்த செய்தி தந்தி மூலம் வந்தது. அதை படித்து விட்டு வழக்கைத் தொடர்ந்தார் வழக்கறிஞர். முடிந்து போன மனைவிக்காக பதறுவதை விட காப்பாற்ற வேண்டிய உயிருக்காக கடமை ஆற்றும் சமநிலையில் வாழ்ந்த இரும்பு மனிதர்களின் வாழ்க்கை இளைஞனுக்கு பாடமாகும். சுகமும் துக்கமும் ஆபத்தானவைதான். சமநிலைதான் சரியான வழி.

சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி

## சித்திரப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



படத்தைப் பாருங்கள் !

வண்ணம் தீட்டுங்கள் !!



கீழே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக் குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்









அ) லக்ஷ்மி ஜெயந்திக்கு தொடர்புடையவை


ஆ) யுகாதி பச்சடிக்குத் தேவையான பொருட்கள்

இ) ஹோலிப் பண்டிகையுடன் தொடர்புடையவை

விடைகள் : அ = 2,4,7,12; ஆ =3,6,8,9;
இ = 1,5,10,11

## சரியான பாதையைக் கண்டுபிடி

ஹோலிப் பண்டிகை அன்று வண்ணப்பொடிகள் ஒருவர் மீது ஒருவர் தூவி மகிழ்வர். ஸ்ரீகிருஷ்ணர் திருக்கையில் உள்ள



வண்ணப் பொடியிலிருந்து கோபிகை தப்பித்துச் சென்ற பாதையைக் கண்டறியுங்கள்!

## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

பூமி உண் திருத்தி, துணைக் பெரியாரைத் கொள், அகற்று பேதமை, இணங்கேல் பையலோடு, பொருள் வாழ் போற்றி தனைப், தொழில் போர்த் புரியேல்.

விடை:

பூமி திருத்தி உண், பெரியாரைத் துணைக் கொள், பேதமை அகற்று, பையலோடு இணங்கேல், பொருள் தனைப் போற்றி வாழ், போர்த் தொழில் புரியேல்.

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-32

### ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. குலசேகர ஆழ்வாரின் திருவவதார மாதம், நட்சத்திரம்.........................................................
2. இறைஞ்சி எனும் சொல்லின் பொருள் .........................................................
3. திருவுறையூர் கமலவல்லித்தாயார் அவதரித்த திருநட்சத்திரம்.........................................................
4. தி.தி.தே. நடத்தும் குழந்தைகளுக்கான இதய மருத்துவமனையின் பெயர் .........................................................
5. இளைத்தல் இகழ்ச்சி என்று குறிப்பிட்டவர் .........................................................
6. திருவல்லிக்கேணியில் அருள்புரியும் நரசிம்மப் பெருமானின் திருநாமம்.........................................................
7. “திரு” எனும் சொல்லால் குறிப்பிடப்படுபவர்.........................................................
8. பஞ்சாங்கம் சிரவணம் என்பதன் பொருள்.........................................................
9. குலசேகராழ்வார் பாடிய பிரபந்தத்தின் பெயர்.........................................................
10. அயோத்தியிலிருந்து திருவரங்கப் பெருமானை திருச்சிக்கு கொண்டு வந்தவர்.........................................................
11. கேரளாவில் புகழ் பெற்ற பகவதி அம்மன் ஆலயம் அமைந்துள்ள இடம் .........................................................
12. தற்போதுள்ள திருவரங்கம் கோயிலைக் கட்டியவர்.........................................................
13. திருப்பதி அருகில் மத்ஸ்ய அவதாரப் பெருமான் ஆலயம் அமைந்துள்ள ஊர்.........................................................
14. சித்திரை திருவாதிரையில் அவதரித்த ஆசார்யர்.........................................................
15. திருச்சியில் தாயாருக்காக அமைக்கப்பட்டுள்ள திவ்யதேசத்தின் பெயர்.........................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.03.2025.

**விடையை எழுதுங்கள்!**


**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



சக்கரத்தைச்சுற்றுங்கள்!

அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!







**விடைகள்**

1) தனலக்ஷ்மி, 2)பங்குனி மாதம், உத்திரம் திருநட்சத்திரம், 3) விஜய லக்ஷ்மி, 4) வீர லக்ஷ்மி, 5) தான்ய லக்ஷ்மி, 6) ஸ்ரீமந்நாராயணர், 7) வித்யா லக்ஷ்மி, 8) கஜ லக்ஷ்மி.

## கணித விளையாட்டு

இங்கு விற்களில் உள்ள கணித விடைக்குப் பொருத்தமான அம்பு வரிசையைப் பொருத்துக




**விடைகள்**

1) iv, 2) i, 3) ii, 4) iii, 5) v



**சித்திரங்களை கவனித்தால் விடை உங்கள் கையில்...**



*இந்த சித்திரங்களைப் பார்த்தால் நினைவுக்கு வரும் பண்டிகையின் பெயர் என்ன? (நம் அண்டை மாநில வருட தொடக்கத்தில் கொண்டாடும் பண்டிகை)*


**யுகாதிப் பண்டிகை**

**(தெலுங்கு வருட பிறப்பு)**

# தாயாரே துணை!

சித்திரக் கதை

கதை மூலம் :திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு.
சித்திரம் :திரு. கே. துவாரகநாத்.




நீண்ட நேரமாகியும் திருமலைக்குச் செல்வதற்கான வழி புலப்படவில்லை. மிகவும் அசதியுற்றார். கண் சுற்றம்படியானது. அப்போது திருவேங்கடமுடையானைப் பிரார்த்தனை செய்தார் அன்னமய்யா...
தாயே! ஸ்வாமியைத் தரிசிக்க தாங்களே வழிகாட்டியாக இருந்து கருணை புரியுங்கள்
திருமலைக்குச் செல்ல வழி தெரியாமல் தவித்த அன்னமய்யாவின் முன்பாக தாயார் தோன்றினார்
தாயே! எனக்கு தாங்களே வழிகாட்டி! கருணை புரியுங்கள்!
மங்கலகரமாய் ஒரு புண்ணியவதி வடிவில் அன்னமய்யாவின் முன்பு அலர்மேல் மங்கைத் தாயார் தோன்றி...
குழந்தாய்! காலணி அணிந்தபடி மலையை ஏறுவது தவறு அல்லவா! இம்மலை புனிதமான சாலக்ராம மலை.
வேகமாக மலை ஏறினார். திருக்குளத்தில் நீராடி ஆலயத்திற்குள் சென்று திருவேங்கடவனைத் தரிசித்தார்.
கொண்டலலோ நெலகொன்ன...
தாயாரும் மறைந்தார். எதிரே பக்தர்களும், ஸ்வாமி ஆனந்த நிலையமும் தெரிந்தது. அன்னமய்யாவின் திருவாயிலிருந்து உடனே சங்கீர்த்தனம் பிறந்தது.
அதிவோ... அல்லதிவோ...
அன்னமய்யாவின் மனம் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி கண்களில் ஆனந்த கண்ணீர் பொங்கியது.
ஓம் நமோ வேங்கடேசாய!
பக்தர்கள் அழைத்தால் போதும் உடனே தாயார் அருள்புரிவாள் என்பதற்கு இதுவே ஒரு சான்று.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர் களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண் டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும்*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D.,P.G.Dip in Ephigraphy, Dip. in Yoga on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



19–01–2025 அன்று தி.தி.தே சார்பில் அயோத்தி இராமபிரானுக்கு பட்டு வஸ்திரங்களைச் சமர்ப்பித்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு தம்பதியினர் உடன் பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர் திரு. பானுபிரகாஷ் ரெட்டி அவர்கள்



15–01–2025 அன்று திருப்பதியில் அமைந்துள்ள தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாக மைதானத்தில் மிக விமர்ச்சியாக நடைபெற்ற ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவத் திருக்காட்சி



19–01–2025 அன்று திருப்பதியில் ஸ்விம்ஸ் மருத்துவமனையில் தனிக்கைச் செய்த தி.தி.தே.செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் இணைச்செயலாட்சித்தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள்



27–01–2025 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் ஆலயத்திற்குட்பட்ட பகுதிகளைத் தனிக்கைச் செய்த தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் இணைச்செயலாட்சித்தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்



26–01–2025 அன்று தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாக மைதானத்தில் இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் உயர் அதிகாரிகள்



02–02–2025 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவின் பதவி அடிப் படையில் உறுப்பினராக பதவி ஏற்ற ஆ.மா. இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.கே. ராமச்சந்திரமோகன் அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சி.எச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-02-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.



ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி
14-03-2025